பக்கங்கள் - 16+8
விலை - ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 158

ஞாயிற்றுக்கிழமை
04 மே 2025

சித்திரை 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**டெங்கு, சிக்கன்குனியா வேகமாக அதிகரிப்பு**

விரிவு - பக்கம் 05

பயங்கரவாதத் தடைச்சட்டம்

## நிச்சயமாக நீக்கப்படும்

### ஜனாதிபதி அநுர உறுதி



கொழும்பு, மே 4

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக அனைத்து வழிகளிலும் போராடியவர்கள் நாங்கள். எனவே, அந்தச் சட்டத்தை நிச்சயம் நீக்குவோம். ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடமும் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளோம் என்று ஜனாதிபதி அநுர தெரிவித் துள்ளார். 15

2028ஆம் ஆண்டில்

## கண்ணிவெடியில்லா நாடாக இலங்கை மாறுவது உறுதி

கொழும்பு, மே 4

**2028** ஆம் ஆண்டில் கண்ணிவெடியற்ற நாடாக இலங்கையை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். 15




## நாடாளுமன்றத் தேர்தலை விடவும் இம்முறை பெருவெற்றி பெறுவோம்!

### அமைச்சர் சந்திரசேகர் ஆணித்தரம்

யாழ்ப்பாணம், மே 4

நாடாளுமன்றத் தேர்தலை விடவும் உள்ளூராட்சித் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப் பெறுவோம். தேர்தல் பரப்புரைகளின் போது மக்கள் வழங்கிய அமோக ஆதரவு அதையே வெளிப்படுத்துகின்றது என்று அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் அமோக ஆதரவு கிடைத்துள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் 15

## மின்கட்டணம் அதிகரிக்கும்!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, மே 4

மின்கட்டணங்கள் ஓரளவு அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளன என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

மின்கட்டணத்தில் ஓரளவு 15

## குளத்தில் மூழ்கி சிறுவன் இறப்பு!



கிளிநொச்சி, மே 4

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் குளத்தில் நீராடச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி 15

## 10,000 வேட்பாளர்களே தீவிரமான பரப்புரையில்

கொழும்பு, மே 4

உள்ளூராட்சித் தேர்தலில் சுமார் 70 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும், சுமார் 10 ஆயிரம் வேட்பாளர்கள் மாத்திரமே நேரடித் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர் என்று ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனம் 15

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு

## தீவகப் போக்குவரத்துத் தொடர்பில் நேற்றுச் சிறப்புக் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், மே 4

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளுக்கான கடல்வழிப் போக்குவரத்துத் தொடர்பாக நேற்றுச் சிறப்புக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. 15



ஆஸி. நாடாளுமன்றத் தேர்தலில்

## ஈழத்துப் பெண் அஷ்வினி வெற்றி

கான்பெரா, மே 4

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தலில் ஈழத்துப் பின்னணி உள்ள பெண்ணான அஷ்வினி அம்பிகைபாகர் பெருவெற்றி பெற்றுள்ளார். 15

## சோமதேவ குழுவினர் செம்மணியில் ஆய்வு!

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம் - செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில், மூத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் நேற்றுகள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில், மனிதச் சிதி 15

முச்சந்தி முரளி



'எலக்சன் வரேக்கதான் உவக்கு பழைய வாக்குறுதியள் நினைவுக்கு வரும் போல'

**தமிழ்ப் பொலிஸார் 500 பேர் சேவையில்**

விரிவு பக்கம் 09

## பஹல்காம் தாக்குதல்தாரிகள் இலங்கைக்குள் ஊடுருவலா?

### கட்டுநாயக்கவில் தீவிரசோதனை

கொழும்பு, மே 4

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் உள்ள பஹல்காம் பகுதியில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய ஆறு பேர் 15

சஞ்சீவி

மக்கள் பே[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 03.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4062 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 04 06 11 61 |
| விசேட எழுத்து | T |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 03.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1129 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 23 48 50 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 03.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0088 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 6 8 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 03.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2168 |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 12 18 29 46 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 03.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5820 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 7 8 4 7 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 03.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1850 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 30 40 49 78 |
| விசேட எழுத்து | W |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 03.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0395 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 7 8 4 7 |

# மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பதே நோக்கம்

## சுயேச்சைக்குழுவாகப் போட்டியிடும் சுலக்சன் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், மே 4

**எமது பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதே எமது நோக்கம். அதற்கான பாதையில் ஈ.பி.டி.பி. பயணிப்பதால் ஒட்டுமொத்த மக்களும் வாக்களித்து வெற்றியடையச் செய்யவேண்டும் என்று உள்ளூராட்சிசபைத் தேர்தலில் கோடாரிச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவின் தலைவர் சுலக்சன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் சுயேச்சைக் குழுவின் தலைவர் சுலக்சன், சுயேச்சைக்குழுவின் பேச்சாளர் விஜயகாந்த், வேலணைப்பிரதேச சபையின் முதன்மை வேட்பாளர் சி.சிவநேசன் ஆகியோர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

காணி விடுவிப்பு என்றும், அதிகாரத் தோனியில் மிரட்டியும் தேர்தல் விதிமுறைகளை மீறி வாக்குகளை அபகரிப்பதற்கு அரசியல் செய்யும் தேசிய மக்கள் சக்தியை மக்கள் புறக்கணிக்கவேண்டும்.

எமது சுயேச்சைக்குழு யாழ்.மாநகரம், கோப்பாய் பிரதேசசபை, வேலணைப் பிரதேசசபை உள்ளிட்ட சபைகளில் போட்டியிட வேட்புமனு செய்திருந்தபோதும், யாழ்.மாநகர வேட்புமனு நிராகரிக்கப்பட்டுவிட்டது. ஏனைய இரு சபைகளிலும் நாம் கோடரிச் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். யாழ். மாநகரப் பகுதியில் எமது ஆதரவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு வழங்க முடிவுசெய்துள்ளோம்.

மக்கள் நலன்களை கருத்திற்கொண்டு, காலச் சூழலுக்கேற்ப மக்கள் தமது வாக்குகளைச் செலுத்தி வாழ்வியலை வளப்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகின்றோம் - என்றார். (எ-20,125)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 03.05.2025 | சனிக்கிழமை | 0528 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| Q | 9 7 1 8 2 6 |

**Super Ball DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 03.05.2025 | சனிக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2794 | Q | 22 42 71 73 |

**சனிதா DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 03.05.2025 | சனிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| W | 09 19 27 77 | 4955 |

**SASIRI DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 03.05.2025 | சனிக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0675 | 17 35 50 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 03.05.2025 | சனிக்கிழமை |

| மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 10 41 44 49 | 4506 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 03.05.2025 | சனிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| J | 30 | 12 24 41 68 | 1970 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 03.05.2025 | சனிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| F | 10 25 53 56 | 2620 |

## ஊடகச் சுதந்திரம் 139 ஆவது இடத்தில் இலங்கை

கொழும்பு, மே 4

எல்லை கடந்த பத்திரிகையாளர்கள் அமைப்பின் 2025 ஆம் ஆண்டு ஊடகச் சுதந்திர தரவரிசைப்படுத்தலில் இலங்கைக்கு 139 ஆவது இடம் கிடைத்துள்ளது. நோர்வே,எஸ்தோனியா,நெதர்லாந்து ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களையும் பிடித்துள்ளன. தெற்காசிய நாடுகளைப் பொறுத்தவரையில் நேபாளம் 90 ஆவது இடத்திலும், இந்தியா 151 வது இடத்திலும், பாகிஸ்தான் 158 ஆவது இடத்திலும்,பங்களாதேஷ் 149 ஆவது இடத்திலும், மாலைதீவு 104 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 175 ஆவது இடத்திலும் உள்ளன. (ச-25, 6)

## யாழில் அடையாளத்தை மாற்ற இடமளிக்கமாட்டோம்

### ஈசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணத்தின் அடையாளத்தை மாற்ற இடமளிக்கமாட்டேன் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர வேட்பாளரும் முன்னாள் துணை முதல்வருமான ஈசன் தெரிவித்துள்ளார். யாழ் .ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழின் அடையாளங்களைச் சிதைத்து தமிழ் மக்களின் இருப்பையும் வாழிடங்களையும் இல்லாதொழிக்கும் செயற்பாடுகளை இன்றைய அரசு செய்ய முனைகின்றது. இவர்களது இந்த சூட்சித்தனமான செயற்பாடுகளுக்கு மக்கள் இடங்கொடுக்கக்கூடாது - என்றார். (ச-20-125)

## வேட்புமனுத்தாக்கலின்றி பரப்புரையில் வர்த்தகர்

வவுனியா, மே 4




வவுனியாவில் வேட்புமனுத் தாக்கல் செய்யாமல் தனக்கு வாக்களிக்குமாறு கோரி பிரபல வர்த்தகர் ஒருவர் தேர்தல் பரப்புரையை முன்னெடுத்துள்ளாரென குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறித்த வர்த்தகர் முன்னாள் இராஜாங்க அமைச்சரான காதர் மஸ்தானின் இலங்கைத் தொழிலாளர் கட்சியின் சின்னமான கங்காருச் சின்னத்தை மையப்படுத்தி இவ்வாறு பரப்புரையில் ஈடுபட்டுவருகின்றார்.

அவரது உருவம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் நகரின் பல பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன. அதில் தன்னை சிறப்பு வேட்பாளர் என்று குறிப்பிட்டுள்ளார். (ச-110)

## கொள்கைப்பற்றுள்ள தமிழ்க்கட்சிகளைத் தெரிவுசெய்க

### யாழில் துண்டுப்பிரசுரம்



யாழ்ப்பாணம், மே 4

எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் சிங்களக் கட்சிகளுக்கு வாக்களிப்பதைத் தவிர்த்து, கொள்கைப்பற்றுள்ள தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு வலியுறுத்தி நேற்றுச் சனிக்கிழமை யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் போராளிகள் நலன்புரிச் சங்கத்தினரால் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா இலுப்பையடிச் சந்தியில் குறித்த துண்டுப்பிரசுர விநியோகம் ஆரம்பமானது. இதன் தொடர்ச்சியாக நேற்றுக்காலை கல்வியங்காடு மற்றும் திருநெல்வேலி பொதுச்சந்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் யாழ்.நகரிலும் விநியோகிக்கப்பட்டன. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கம்பீரத்துடன் யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்புவோம்



## தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகரசபை வேட்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 4**

**யாழ்ப்பாண மாநகரத்தின் அபிவிருத்தி என்பது வரலாறுசார் தனித்துவம் மாறாததாகவும், ஒருங்கிணைந்த வசதிகளை வழங்கும் தன்மை மிக்கதாகவும், பாரம்பரிய கம்பீரம் மிக்கதாகவுமான உட்கட்டமைப்பை உருவாக்குவதுடன், வினைத்திறனான சேவைகளை உத்தமமான விளைவினைத் தரும்வகையில் வழங்க ஆவண செய்வோம். யாழ்ப்பாணத்தின் தனித்துவம், அடையாளம் மாறாத பயனர்கள் திருப்திபெறும் ஒருங்கிணைந்த அபிவிருத்தியே எமது இலக்கு. இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாநகரசபைக்கான வேட்பாளர் சு.கபிலன் அண்மையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாநகரமானது இடம் சார்ந்து, சமூகம் சார்ந்து, வரலாறு சார்ந்து, பொருளாதாரம் சார்ந்து மற்றும் பௌதீகக் கட்டமைப்பு சார்ந்து தனித்துவம் மிக்கதாகும்.

யாழ்ப்பாண நகரத்தில் முதலாவதாக இடம்சாரர் தனித்துவத்தினை நோக்கின் இது ஒரு முனைவு நகரமாகும். இந்த நகரம் வேறு நகரங்களோடு தொடர்பினைப் பேணும் வகையிலான அமைவிடத்தினைக் கொண்டதில்லை. இதனால் தனித்துத் தன்னிறைவோடு அமைய வேண்டிய நகரமாக இருப்பதே யாழ்ப்பாண நகரை இடம்சார்ந்து நிலைபெறச்செய்யும்.


இரண்டாவதாகச் சமூகம் சார்ந்து நோக்கின் தமிழ்பேசும் மக்களை அதிகம் கொண்டதாக இருப்பதோடு, ஒவ்வொரு சமூகம் சார்ந்தும் நீண்ட பண்பாட்டுப் பாரம்பரியத்தினைக் கொண்டமைந்ததாக நகர சமூகம் வாழ்ந்துவருகின்றது.

மூன்றாவதாகப் பொருளாதாரம் சார்ந்து நோக்கின் வர்க்கரீதியில் மிக வசதியானவர்களையும் வசதி குன்றியோரையும் கொண்டதாக உள்ளது.

அதேசமயம் முதல் நிலைப் பொருளாதாரமாகிய மீன்பிடியையும், விவசாயத்தையும், சிறுகைத்தொழிலையும் தன்னகத்தே கொண்ட நகரமாக அமைகின்றது. நான்காவதாகப் பௌதிக ரீதியாக நோக்கின் சிறிய கனவளவுகொண்ட நீரேந்து பிரதேசங்களைக் கொண்ட தரைக் கீழ் நீர்வளத்தை மையமாகக் கொண்ட உருவவியல் கட்டமைப்பினைக் கொண்டுள்ளது.

இவ்வாறாகப் பல தனித்துவங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதற்கு ஏற்றாற்போல பல தனித்துவமான அபிவிருத்திப் பிரச்சினைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றைத் தீர்க்கும் வகையில் குடிதண்ணீர் பிரச்சினைகளை விரைவாகத்தீர்த்தல், கழிவு சேகரிப்பு மற்றும் மேலாண்மையை வினைத்திறனாக மேற்கொள்ளுதல், மலசலகூடக் கழிவுகளை மையப்படுத்திச் சேகரித்துச் சுத்தமாக்குதல், நவீன சந்தைகளைப் புனரமைத்தல் மற்றும் புதிதாக அமைத்தல், முன்பள்ளிக் கட்டமைப்பை வலுவாக்குதல், குழந்தைகளுக்கான பாதுகாப்பு மையம் மற்றும் சிரேஸ்ர பிரஜைகள் பகிரகத்தினை அமைத்தல் என 31 இலக்ககளை முன்னிறுத்தி தேர்தலில் சந்திக்கிறோம்.

நிச்சயமாக எமது ஆட்சி அமைந்தால் ஊழல் அல்லாத முறையில் மத்திய அரசின் உதவியுடனும் சுய நிதியீட்டலுடனும் மேலும் அரச தனியார் கூட்டிணைவுடனும் மாநரின் அபிவிருத்தியினை சாத்தியமாக்க முடியும். இதனை நனவாக்க இம்முறை திசைகாட்டிக்கு வாக்களிக்க வேண்டுகிறோம் - என்றார். (ச-26)



# அடக்குமுறையைத் திணிக்கும் அரசாங்கத்தை எச்சரிப்போம்

## செல்வம் அடைக்கலநாதன் எம். பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 4

எமது மக்களின் வாக்குகளையும் பெற்றுக் கொண்டு இந்த அரசாங்கம் எங்கள்மீது அடக்குமுறையைத் திணிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குமாக இருந்தால் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய இனம் இந்த நாட்டிலே சுதந்திரமாக எமது நிலத்தில் வாழக்கூடிய அனைத்து உரித்துக்களையும் கொண்ட இனமாக தமிழினம் இருக்கின்றது.

குறிப்பாக வடக்கு - கிழக்கில் பூர்வீகத்தைக் கொண்ட ஒரு பிரதேசமாக இருந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் எமது இனத்துக்கு ஏற்படுத்துகின்ற அநீதிகளை தட்டிக்கேற்கின்றவகையில் ஜனநாயகப் போராட்டங்கள், ஆயுதப் போராட்டங்கள் இடம்பெற்றன.

அதற்கான தியாகங்களை எமது இளைஞர் யுவதிகள், பொதுமக்கள் எல்லோரும் தியாகம் செய்துள்ள வரலாறு இன்றைக்கும் உள்ளது. இந்த வரலாற்றின் தன்மைதான் ஐ.நா. சபை வரைக்கும் கதவைத் தட்டி உள்ளது என்பது உண்மை.

இந்தநிலையில் இனவாதத்தை ஒழிப்போம் என்று எனவே அரசாங்கம் எமது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கவனம் செலுத்த வேண்டும். அதைத் தட்டிக் கழிக்கும் வகையில் இனப்பிரச்சினையை ஒழிப்போம் என்பதை ஏற்கமுடியாது- என்றார். (ச-56)



# யாழ். இசைக் கலையக சிலோன் சிங்கர் போட்டி

யாழ்ப்பாணம், மே 4

யாழ். இசைக் கலையகம் நடத்தும் மாபெரும் சிலோன் சிங்கர் பாடல் போட்டி நேற்று குருநகரில் நடைபெற்றது.

தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சனின் பிரதான நிதி அனுசரணையில் குருநகர்சனசமூகநிலையகலையரங்கில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது வாழ்நாள் கலைஞர்கள், சிறந்த பாடகர்கள் ஏற்பாட்டுக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டனர். (ச-20)

# தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு வாக்களிப்பது காலத்தின் தேவை

## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவிப்பு

கொழும்பு, மே 4

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் கட்சிகளுக்கு வாக்குகளை வழங்குவதே காலத்தின் தேவையாகும் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி நகர சபை வேட்பாளர் கிசோர் தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பை நடத்தி அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வேட்பாளர் பட்டியலில் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டபோதும் நாம் எமது உரிமையைச் சட்டத்தின்மூலம் மீண்டும் பெற்றுக்கொண்டோம். பதவிக்காக நாம் தேர்தலில் போட்டியிடவில்லை. மக்களின் நலன்களை முன்னிறுத்திய சேவையை செய்யவே நாம் இந்தத் தேர்தலில் களமிறங்கியுள்ளோம்.

எமது யாழ்ப்பாணம் கல்வி, அறிவு, பண்பாடுகளில் அதி உச்ச நிலையில் இருக்கும் ஒரு மாவட்டம்.

எனவே தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்து உள்ளூர் அதிகார சபையின் செயற்றிறனை வீணாக்கும் நிலையை நாம் உருவாக்கிவிடக்கூடாது - என்றார். (ச-125)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தேவசேனாபதி புவனேஸ்வரி

வருடங்கள் இரண்டா ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்...
S. தேவசேனாபதி-(கணவர்) (ஓய்வுநிலை அரச லிகிதர்)
மகன்- T. சுதர்சன் (PELAGIKOS PVT Ltd)
மகன்- T. சுகந்தன் (பொது சுகாதார பரிசோதகர்)
மகன்- T.சுசாந்தன் (கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம், இரசாயனவியல் ஆசிரியர் NEW SCIENCE HALL, UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தே.ம.சக்தியின் பக்கம் சாய்ந்தால் சங்கடங்களே வந்துசேரும்

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 4**

**அரச கட்சியை நாம் வெறுக்கவில்லை. அரச கட்சிக்கு வாக்களித்தால் எமது தனித்துவம் அழிந்துவிடும் என்ற உண்மையையே வலியுறுத்துகின்றோம். நாம் அரச கட்சியினரின் மேல்வாரியான சில நடவடிக்கைகளைக் கண்டு அவர்கள் பக்கம் சாய்ந்தோமானால் எதிர்காலத்தில் பல சங்கடங்களைச் சமாளிக்கமுடியாமல் போய்விடும்.**

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்கள் தமது விரக்தியை தேர்தலில் காட்டினால் அது அரச கட்சிக்குச் சார்பாக மாறிவிடும். சென்றமுறை ஒரு இலட்சத்துக்குக் குறைந்த தொகையினரே அரச கட்சிக்கு வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்தவர்களின் தொகை ஒரு இலட்சத்தைத் தாண்டியிருந்தது.

ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே இருந்த பிளவுகள் அரச கட்சிக்குச் சார்பாக அமைந்தன.

இதுவரை காலமும் நடந்துவந்த ஜனநாயகத் தேர்தல்களை நாம் இனி எவ்வளவு காலத்துக்கு எதிர்பார்க்கமுடியுமோ தெரியாது. சீனா, கியூபா,வடகொரியா போன்ற நாடுகளில் இருக்கும் தேர்தல் முறை படிப்படியாக இங்கும் வர இருக்கின்றது என்பதை மக்கள் உணரவேண்டும்.

அரச கட்சி இந்தக் குறுகிய காலத்தினுள் நடைமுறைப்படுத்தாது விட்ட தேர்தல் வாக்குறுதிகள் பற்றி மக்களுக்குத் தெரியும்.

எனவே இம்முறை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கே மக்கள் வாக்களிக்கவேண்டும்-என்றார்.

(ச-25,100)

# தமிழரசுக்கட்சியின் மேதினக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 4

தமிழரசுக் கட்சியின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் முக்கியஸ்தர்களின் உரையுடன் சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் முக்கியஸ்தர்கள் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-41-20)



# கௌரவிப்பு

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் மாவட்ட மட்டத்தில் கலை, வர்த்தக, உயிரியல் தொழில்நுட்ப பாடத்துறைகளில் முதலாம் இடத்தைப்பெற்ற கிளி/முழுங்காவில் மகா வித்தியாலய மாணவர்களான ம.கம்சா, சூ.திபோசன், ஸ்ரீ.ஆரணிகா ஆகியோர் மக்கள் வங்கி கிளிநொச்சி கிளை உத்தியோகத்தர்களால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் பாடசாலை முகாமைத்துவக் குழுவினரும் கலந்துகொண்டனர். (ச-159)

# பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் வவு. சைவப்பிரகாச மாணவி முதலிடம்!



வவுனியா, மே 4

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி வேணுகுமார் தேவரஷ்மி 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியில் 328 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

இதேபிரிவில், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இராமகிருஸ்ணன் கோகுலன் 2ஏசி சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் நிலையையும், சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச்சேர்ந்த ஆனந்தராஜ் தேனுஜா ஏ2பி பெறுபேறுகளைப் பெற்று மாவட்டத்தில் மூன்றாம் நிலையையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-33-18)

# மன்னாரில் மேதினப் பேரணி !

மன்னார்.மே. 4

சுரண்டல், ஒடுக்குமுறை மற்றும் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் திட்ட வரைபு ஒன்றியத்தால் 'விவசாய சக்தியைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் மேதினப் பேரணி கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பேரணி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை நோக்கிச் சென்றது. பேரணியில் கலந்துகொண்டவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக நீக்கு, அநுர அரசே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பதிலை தா, அரசியற் கைதிகளை உடனே விடுதலை செய்,விவசாயக் காணிகளை விகாரைக்கு பறிக்காதே, காற்றாடிச் செயல் திட்டத்திற்கு அனுமதி அளிக்காதே, கச்சதீவை தாரை வார்க்காதே,இந்திய இழுவைப் படகுகளின் வருகையை நிறுத்து, காணி அபகரிப்பையும், அத்துமீறிய குடியேற்றத்தையும் நிறுத்து உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பினர். தொடர்ந்து மன்னார் பஜார் பகுதியில் மேதினக் கூட்டம் இடம்பெற்றது. (ச-22,56)







தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள பரிஹூகா சிறுவர் முன்பள்ளியில் நேற்றுமுன்தினம் சிறுவர் சந்தை நடத்தப்பட்டது. இதில் பலர் பங்கேற்று தமக்கு தேவையான பொருள்களை கொள்வனவு செய்தனர். (ச-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

உலக சரித்திரத்தில் காணப்பெறும் காரியங்களெல்லாம் உற்சாகத்தின் வெற்றிச் சின்னங்களே

– எமெர்சன் –

# மக்களின் நகை மக்களுக்கே!

'விடுதலைப்புலிகளிடம் இருந்து' கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் தங்கநகைகளையும், வெள்ளிகளையும் மத்திய வங்கியின் இருப்புக்கு மாற்றுவதற்கான நடைமுறைகளை ஆரம்பித்திருக்கின்றது அரசு. இந்த நகைகளை கைமாற்றும் செயற்பாடு பத்தரமுல்லயில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றிருக்கின்றது. தமிழர்களின் உரிமைகளையும், அவர்களின் உழைப்பையும், உடைமைகளையும் அவர்களிடம் திரும்ப ஒப்படைத்தே தீருவோம் என்று மாறிமாறிக் கூறிக்கொண்டிருக்கும் அநுர அரசாங்கம், இந்த விடயத்தை இரண்டு பார்வையின்கீழ் நோக்க வேண்டிய கட்டாயம் இன்று காலத்தேவையாக உள்ளது.

முதலாவது விடயம் இந்தத் தங்கநகைகள் விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டவையல்ல. அதாவது, விடுதலைப்புலிகளின் தளபதிகளின் வீடுகளில் இருந்தோ, அல்லது விடுதலைப்புலிகளின் முகாம்களில் இருந்தோ கைப்பற்றப்பட்டவையல்ல. மாறாக, விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட வங்கிகளில் இருந்தே பெறப்பட்டவை. எனவே, இந்த நகைகளை 'விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நகைகள்' என்ற பார்வையின்கீழ் அணுகுவதே மிகப்பெரும் பிழையாகும். அத்துடன், அந்த நகைகளை மத்திய வங்கியின் 'தங்கச் சொத்தாக' மாற்றவேண்டும் என்ற முடிவு இற்றைக்கு பத்தாண்டுகளுக்கு முன்னரே எடுக்கப்பட்டாயிற்று. எனவே, இத்தனை காலமும், இந்த நகைகளை எந்த அடிப்படையில் இராணுவம் வைத்திருந்தது என்பதை முதலில் விசாரிக்கவேண்டும்.

இரண்டாவது விடயம், விடுதலைப்புலிகளின் வங்கிகளில் இருந்து கைப்பற்றப்பட்ட நகைகளை மீண்டும் உரியவர்களிடம் அதாவது மக்களிடம் ஒப்படைப்பதே பொருத்தமானது. அதை இலங்கை அரசாங்கமும் ஏற்றிருந்தது. ஆதலால், பொருத்தமான அடையாளப்படுத்தல்களைக் காண்பித்து அந்த நகைகளை உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஓர் அரசவங்கியின் முறையான கட்டமைப்புக்கு எந்தக் குறைவும் இல்லாமல்தான் விடுதலைப் புலிகள் மக்களின் நகைகளைக் கையாண்டனர். எனவே, அந்த வங்கிகளின் ஆவணங்களில் அந்த நகைகளில் உரிமையாளர்களின் விவரங்கள் இருக்கவே செய்யும். எனவே, மக்களின் நகைகளை மக்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்ற இதய சுத்தியுடன் அரசாங்கம் செயற்பட்டிருக்குமானால், இந்த நகைகளை என்றோ ஒப்படைத்திருக்கலாம். '15 ஆண்டுகளாக நகைகளை எவரும் பொறுப்பேற்கவில்லை' என்ற தோரணையில் அவற்றை அரசின் தங்கச் சொத்தாக மாற்றவேண்டிய அவசியமில்லை.

எல்லாவற்றையும்விட, இராணுவம் என்றாலே ஒருவிதப் பொதுப்பதற்றத்துடன் அந்த விடயத்தை அணுகும் உளவியல்நிலை இன்னமும் தமிழர்களை விட்டகலவில்லை. இது இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்களுக்கு நன்றாகத் தெரியும், அநுர அரசாங்கத்துக்கும் அது புரியும். இவ்வாறிருக்கையில், இராணுவத்தினரிடம் நகைகளை ஒப்படைத்துவிட்டு, உரியவர்களை அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளச் சொன்னால், அவர்கள் எவ்வாறு அவற்றைப் பெறுவதற்கு முன்வருவார்கள்? அத்துடன், 'எதற்காக புலிகளிடம் கொடுத்தீர்கள்?', 'என்ன நோக்கத்துக்காகப் புலிகளிடம் கொடுத்தீர்கள்?', 'உங்களுக்கும் புலிகளுக்கும் இடையிலான தொடர்பு என்ன?' உள்ளிட்ட விசாரணைகளை தாம் எதிர்கொள்ளவேண்டும் என்ற அச்சத்தாலும் மக்கள் அந்த நகைகளைக் கேட்காமல் விட்டிருக்கலாம். எனவே, மக்களுக்கு எந்த அச்சுறுத்தலும் வராது என்ற பொதுவான உத்தரவாதங்களின் அடிப்படையில் இந்த விடயத்தை ஆரம்பத்தில் இருந்து அணுகுவதற்கு அநுர அரசாங்கம் முன்வரவேண்டும். மக்களின் காணிகள் மட்டுமல்ல, நகைகளும் அவர்களைச் சென்றடைய வேண்டும். அது அவர்களின் உழைப்பு, குருதி, வியர்வை எல்லாமுமாகும்.




# இருநாட்டின் இணக்கத்துடனேயே இந்தியா ஒப்பந்தங்கள் பகிரப்படும்

## ஜனாதிபதி அநுர ஆணித்தரம்



**கொழும்பு, மே 4**
**இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் அடுத்தவார நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் முன்வைக்கப்படமாட்டாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு உள்ளிட்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் ஒளித்துவைத்துள்ளது எனவும், அவை விரைவில் மக்கள் மயப்படுத்தவேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்திவருகின்றன.

நாடாளுமன்றம் எதிர்வரும் 8 ஆம் திகதி கூடும்போது மேற்படி ஒப்பந்தங்கள் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் தனியார் தொலைக்காட்சியொன்றில் நேற்றுமுன்தினம் இரவு ஒளிபரப்பான விவாத நிகழ்வில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, "அடுத்த வாரம் முன்வைக்கப்படமாட்டாது. அதற்கு சற்று காலம்வேண்டும். எனினும், நிச்சயம் சபையில் முன்வைக்கப்படும். கைச்சாத்திடப்பட்ட சில ஒப்பந்தங்களை வெளியிடுவதற்கு இரு நாடுகளினதும் இணக்கம் அவசியம். ஒப்பந்தங்களை வெளியிடுவது தான் அரசாங்கத்துக்கு சாதகமாக அமையும். ஏனெனில் சிலர் போலியான மாயையைத் தோற்றுவித்து வருகின்றனர். இந்தியா, பாகிஸ்தானுக்கிடையில் மோதல் வந்தால் கொழும்புக்குக் குண்டு போடப்படுமாம் என்றெல்லாம்கூட மாயையைத் தோற்றுவித்துவருகின்றனர்- என்றார். (ச-44)

# தேசபந்துவுக்கு கொலைமிரட்டல்

இனந்தெரியாத இரண்டு நபர்களால் தேசபந்து தென்னக்கோனுக்கு கொலைமிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்துள்ளனர். தேசபந்து தென்னக்கோனுக்கு பாதாள உலகக் கும்பலின் தலைவர் கஞ்சிபான இம்ரான் என அழைக்கப்படும் மொஹமட் நஜீம் மொஹமட் இம்ரானிடமிருந்து கொலைமிரட்டல் விடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸ் தரப்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

# டான் பிரியசாத் கொலை துப்பாக்கிதாரி கைது!



கொழும்பு, மே 4
டான் பிரியசாத் கொலை வழக்கில் துப்பாக்கிச்சூடு நடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த பிரதான சந்தேகநபர் குருந்துவத்தைப் பிரதேசத்தில் வைத்து குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)




# பொலிஸ் காவலிலிருந்த இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, மே 4
போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவர், இன்று கொஸ்கொடப் பொலிஸாரின் காவலில் இருந்தபோது உயிரிழந்துள்ளார்.
கொஸ்கொட ஹதரமன்ஹந்திய பகுதியைச் சேர்ந்த தரிந்து சிறிவர்தன டி சொய்சா (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார். இளைஞன் துன்புறுத்தப்பட்டு உயிரிழந்திருப்பின் இது தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டு, சம்பவத்தில் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# டெங்கு, சிக்கன்குனியா வேகமாக அதிகரிப்பு

கொழும்பு, மே 4
மேல் மாகாணத்தில் டெங்கு மற்றும் சிக்கன்குனியா நோயாளிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துவருவதாக, மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தம்மிகா ஜெயலத் தெரிவித்துள்ளார்.
இந்த இரண்டு நோய்களும் ஒரே நுளம்பால் பரவுகின்றன. காய்ச்சல் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகவேண்டும். இதுவரை பதிவான மொத்த டெங்கு நோயாளிகளில் 50வீதத்துக்கு மேலானோர் மேல் மாகாணத்திலிருந்தே பதிவாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
திங்கட்கிழமை- சித்திரை 5
05.05.2025
சுபநேரம் : 10.34- 12.04
ராகுகாலம் : 03.04 - 04.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வியாபாரத்தில் விற்பனை சற்றுக் குறைவாகத் தான் இருக்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண்செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக் கிடையே வாக்குவாதம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவிகிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பணியாளர்கள் நல்ல படி ஒத்துழைப்பார்கள்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். பிற்பகலுக்குமேல் புதிய முயற்சிகளில் ஈடுபடுவ தைத் தவிர்க்கவும்.

**சிம்மம்:** இன்று எதிலும் நிதானத்துடன் செயற் படவும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர் களை அனுசரித்துச்செல்வது நல்லது. எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர் களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர் களால் அனுகூலம் உண்டாகும். பிரமுகர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்று வதற்காக செலவுசெய்வீர்கள்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகிமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம்செலுத்தவும். கணவன் மனைவிக்கி டையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கி அந்நி யோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும். உறவினர் களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் பெரியவர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச் சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கி டையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.


**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம்செலுத்தவும். மாலையில் உறவினர்கள், நண்பர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவுகள் உதவிகேட்டு வருவார்கள்.

# றொமாறியோ ஷெப்பேர்ட் அதிரடி சென்னைக்கு மீண்டும் தோல்வி!

## மாத்ரே, ஜடேஜாவின் போராட்டம் வீண்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற சென்னைக்கு எதிரான ஆட்டத்தில், றொமாறியோ ஷெப்போர்டின் கடைசிக்கட்ட அதிரடி காரணமாக பெங்களூர் அணி வெற்றி பெற்று பிளேஒவ் வாய்ப்பை பிரகாசப்படுத்தியது.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை முதலில் களத்த டுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 5 விக்கெட்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி 18 ஓவர்கள் நிறைவில் 158 ஓட்டங்களையே பெற்றிருந்தது. ஆனால், றொமேறியோ ஷெப்பர்ட் 14 பந்துகளில் 53 ஓட்டங்களை விளாசியமையால் பெங்களூர் கம் பீரமான நிலையை அடைந்தது. பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு ரஷீட், சாம் கரன் இருவ ரும் ஏமாற்றினார்கள். எனினும், 17 வயதேயான வீரரான ஆயுஸ் மாத்ரே மற்றும் ஜடேஜா இருவரும் அபாரமாக விளையாடி இணைப் பாட்டமாக 114 ஓட்டங்களைப் பகிர்ந் தனர். 94 ஓட்டங்களுடன் மாத்ரே ஆட்டமிழந்தார். டோனி 8 பந்து களை எதிர்கொண்டு 12 ஓட்டங் களை மட்டுமே பெற்றார். ஜடேஜா வின் போராட்டமும் கடைசிக்கட்டத் தில் வீணாய்ப்போக 211 ஓட்டங்க ளையே சென்னை பெற்று 2 ஓட் டங்களால் தோல்வியடைந்தது. ஜடேஜா 77 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காதிருந்தார். (ம)




# பொதுக்கூட்டம்

கொடிகாமம், மே 4

தென்மராட்சிப் பிரதேச பிரிவுச் சங்க பகிரங்கசேவை ஓய்வூதிய நம் பிக்கை நிதியத்தின் 20 ஆவது ஆண்டுபொதுக்கூட்டம் ஓய்வுநிலை அதிபர் லயன் செ.சுப்பிரமணியம் தலைமையில் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திரு மதி உஷா சுபலிங்கம், சிறப்பு விருந் தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக கணக்காளர் இ.நமணன், கொழும்பு ப.சே.ஓ.ந.நிதியப் பொரு ளாளர் சே.சுப்பிரமணியம், யாழ். மாவட்ட ப.சே.ஓ.ந.நிதியத் தலைவர் அ.அருந்தவநேசன், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக ஓய்வூதிய அபிவி ருத்தி உத்தியோகத்தர்களான திரு மதி அனுசா திவாகரன் மற்றும் எஸ்.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-41-159)

# நல்லை ஆதீனத்தின் மறைவுக்கு பிரார்த்தனை வாரம் அனுஷ்டிக்குக

## அகில இலங்கை சைவ மகாசபை வேண்டுகோள்

சிவபெருமான் திருவடி நிழலை அடைந்த நல்லை ஆதீனக் குரு முதல்வரை நினைவுகூர்ந்து இவ்வாரத்தை பிரார்த்தனை வார மாக அனுஷ்ட்டிக்குமாறு ஈழத்து சைவசமயிகளை அகில இலங்கை சைவ மகாசபை வேண்டியுள்ளது. குறிப்பாக இன்று ஞாயிற்றுக்கிழமை அனைத்து அறநெறிப்பாடசாலைகளிலும் சமய நிறுவனங்களிலும் சுவாமிகளின் நினைவுப்பிரார்த்தனை களை உணர்வுபூர்வமாக அனுஷ்டியுங்கள். ஏறத்தாழ அரைநூற் றாண்டு காலம் ஈழத்து சைவ சமயத்தின் அடையாளமாக உலக ளாவிய ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும் அனைத்து நிகழ்வுகளையும் பிரதிநிதிப்படுத்திய உயரிய குருமுதல்வருக்கு நாம் செய்யும் கைம்மாறாக இது இருக்கும் என்றும் அகில இலங்கை சைவ மகாசபை தெரிவித்துள்ளது. (ச-125-66)

# செயற்பட்டு மகிழ்வோம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளி மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு முன்பள்ளி முன்றலில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. கணேச சனசமூக நிலையத்தின் தலைவர் சி.செல்வஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்குப் பிரதேசபை செயலாளர் அ.பிரதீபன், சிறப்பு விருந் தினராக சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவைநலன் ஓய்வுபெற்ற முகாமையாளர் நா.ரவீந்திரன், எல்.ஓ.எல்.சி. நிறுவன உள்ளகக் கண்காய்வாளர் இ.குமரன், இலங்கை போக்குவ ரத்துச்சபை ஓய்வுபெற்ற தலைமைப் பொறியியலாளர் ச.முருகநே சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WE'RE HIRING

JOB VACANCY

வேலைவாய்ப்பு


- SALES GIRL & BOY
  காசாளர்
- DATA ENTRY
  தரவுப் பதிவாளர்
- STORE KEEPER
  களஞ்சிய உதவியாளர்
- CASHIR
  காசாளர்
- ACCOUNTANT
  கணக்காளர்
- PACKING
  பொதி செய்பவர்

NORTHWAY
Family Mart

வயதெல்லை 20 - 35.
சுயவிபரக் கோவையுடன்
நேரில் சமூகளிக்கவும்.

184, Palaly road, Thirunelvely.
Uppumadam Junction, K.K.S road, Kondavil.
northwayfamilymart18@gmail.com

# மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 11 . 1955

மறைவு 02 . 05 . 2025

## ஆறுமுகம் இலங்கைநாயகம்

பலாலியைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இலங்கைநாயகம் அவர்கள் நேற்று முன்தினம் (02.05.2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் சகுந்தலாதேவி (அசுவதி) அவர்களின் அன்புக் கணவரும் அனோஜா (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி), விதுஜா (சுவிஸ்), நர்த்தனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அரிஹரன் (அதிபர்-யா/நெடுந்தீவு றோ.க.வி), றஜீவ் (சுவிஸ்), சிவசஜீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விக்கினேஸ்வரி, கனகநாயகம் (பூராசா), இந்திராணி, பூலோகசந்திரன், சிவலோகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை தொட்டில அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வியாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 612 7515

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 03 . 1947

மறைவு 03 . 05 . 2025

## வைத்திலிங்கம் கந்தசாமி

பாடசாலை வீதி, இடைக்காடு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கந்தசாமி அவர்கள் நேற்று (03.05.2025) சனிக்கிழமை இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-கண்ணகை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-நல்லம்மா தம்பதியின் பாசமிகு மருமகனும் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் வல்லிபுரம் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்), செல்லம்மா, காலஞ்சென்றவர்களான நல்லம்மா, சின்னத்தங்கம், மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருள்ராகவன், கார்த்திகா (UK), கஜந்தன் (கணிய அளவையாளர் , வீதி அபிவிருத்தி அதிகாரசபை-அநுராதபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் துஷ்யந்தினி, வேல்பிள்ளை (UK), மதுரா ஆகியோரின் அன்பு மாமனாரும் டருண் (UK), ஜெரோன் (UK), நிரோன் (UK), தகீஸ், தகீஸன், வாகினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன்கள்
க.அருள்ராகவன் 077 440 2239
க.கஜந்தன் 077 939 1426

பாடசாலை வீதி,
இடைக்காடு அச்சுவேலி.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 05 . 1961

மறைவு 30 . 04 . 2020

## அமரர் சண்முகநாதன் சத்தியவரதன்
## (சந்திரன்)

ஆண்டுகள் ஐந்து ஆனபோதிலும்
பறந்துசென்ற உம் அன்பினைப் பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே- நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்குகின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு ஆனபோதும்
எம் தலைவன் உங்களுக்கு நிகர் தான் எதுவோ? எம் வாழ்வு
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்ட வீடு வெறிச்சோடி
நிம்மதி ஏதுமின்றித் தவியாய்த் தவிக்கின்றோம்
உற்றவொரு துணைபோன்று உம் ஆத்மா எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதனைக் காட்டுமப்பா
நீங்கள் எமைக் காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பத்தின் ஒளி விளக்கே...

"சத்தியகிரி"
[illegible] லேன், இணுவில் மேற்கு.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் ஆயுஸ் புலமைப்பரிசிலுக்கு இலங்கையரிடம் விண்ணப்பங்கள் கோரல் !

## ஜூன் 8 முடிவுத் திகதி

**யாழ்ப்பாணம், மே 4**

**இந்திய அரசாங்கத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் ஆயுஸ் புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் இந்தியப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.**

ஆயுஸ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதி கற்கைநெறிகளைத் தொடரமுடியும்.

ஒவ்வொரு கற்கைநெறிகளுக்குமான தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பான விவரங்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் இளமாணிக் கற்கைநெறி ஒன்றுக்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்து கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தகமை பெற்றவர்களாகவும், யோக சாஸ்திரத்தில் கலைமாணி மற்றும் யோகாவில் விஞ்ஞானமாணி ஆகிய பட்டங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் ஏதாவது ஒரு பாடத்துறையில் தகமை பெற்றவர்களாகவும் இருத்தல்வேண்டும். சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் முதுமாணிக் கற்கைநெறி ஒன்றுக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்திய மத்திய மருத்துவப்பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய

அந்தந்த துறைகளில் இளமாணிப் பட்டத்தைக் கொண்டவர்களாகவும், கலாநிதிப் பட்டத்துக்கு விண்ணப்பிப் பவர்கள் இந்திய மத்திய மருத்துவப்பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய

அந்தந்தத் துறைகளில் இளமாணி, முதுமாணித் தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் காலம் முழுவதற்குமான கற்கைநெறிக் கட்டணம் மற்றும் மாதாந்த மாணவர் உதவித்தொகை, தங்குமிடத்துக்கான உதவித்தொகை மற்றும் வருடாந்த மானியம் என்பன வழங்கப்படும் என்றும், ஆர்வமுடையவர்கள் wwwa2ascholarships.iccr.gov.in என்ற இணையத்தளத்தின் ஊடாக எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முதற் செயலாளர் சந்தீப் சௌதாரி அறிவித்துள்ளார்.

மேலதிக விவரங்களை 011 2421605, 0112422788, 011 2422789 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் அல்லது eduwing.colombo@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக இந்தியத் தூதரகத்தின் கல்விப்பிரிவுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-26)



# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 4

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிசங்கத்தின் ஏற்பாட்டில், குருதிக்கொடை முகாம் யாழ்.மாவட்ட நலன்புரிச்சங்கத் தலைவரும், உதவி மாவட்டச் செயலருமான உ.தர்சினி தலைமையில் யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ச-25,66)



சர்வதேச உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு ஏழாலை இந்து இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவினரின் பங்குபற்றுதலுடன் மாபெரும் குருதிக்கொடை முகாம், ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது. (ச-25,66)

# திருத்தல யாத்திரை

கொடிகாமம், மே 4

இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபை, இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றியம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் இனங்களுக்கிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி எதிர்வரும் 8ஆம் திகதி வியாழகிழமை காலை 6 மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் திருத்தல யாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

யாத்திரையில் பங்கேற்போர் வரவை உறுதிப்படுத்த 0779236552 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-159)

# சுற்றுலா அபிவிருத்தி மீளாய்வுக்கூட்டம்!



யாழ்ப்பாணம், மே 4

2025ஆம் ஆண்டில் நிறைவேற்றவுள்ள சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக்கூட்டம் யாழ்.மாவட்ட பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் கடந்த புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தெல்லிப்பழை கீரிமலைக் கடற்கரைப் பகுதியில், பிதிர்க்கடன் நிறைவேற்றும் செயற்பாட்டுக்கு இடையூறாக உள்ள கற்களை அகற்றி பாதுகாப்பான முறையில் பிதிர்க்கடன் மேற்கொள்வதற்கான பொருத்தமான செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அத்துடன் காங்கேசன்துறைக் கடற்கரையில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவின் பகுதி கடுமையான கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு சிறுவர் பூங்காவுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் அதனை புனரமைப்புச்செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. காரைநகர் கசூரினாக் கடற்கரையைச் சிறந்த வசதிகள் கொண்ட கடற்கரையாக மாற்றுவதற்கு ஒதுக்கிடப்பட்ட நிதிக்கமைய, நேரடியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் இணைந்து களவிஜயம் செய்து அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய சுற்றுலாத்துறை அபிவிருத்தித் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ச-41-27)

# மன்னார் மாவட்ட டிப்போவுக்கு இ.போ.ச. தலைவர் திடீர்ப் பயணம்!

மன்னார், மே 4

மன்னார் இலங்கை பொதுப் போக்குவரத்துச் சாலைக்கு இலங்கைப் பொது போக்குவரத்துசபையின் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் போக்குவரத்துச் சாலையில் பல கோடி ரூபா பெறுமதியான பஸ்கள் உரிய பராமரிப்பின்றிக் காணப்படுகின்றன என்றும், அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் பல ஆண்டுகளாகக் கொள்வனவு செய்யப்படாதுள்ளன என்றும் இலங்கைப் பொது போக்குவரத்து சபையின் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் ஆகியோரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கொழும்பு, கண்டி போன்ற வெளிமாவட்டச் சேவைகளுக்குத் தற்போது மன்னார் போக்குவரத்துச்சாலை மிகவும் பழமையான பஸ்களையே பயன்படுத்தவேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைக்கான காரணம் தொடர்பில் விரைவில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். அதன் அடிப்படையில் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொதுப் போக்குவரத்துசபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-56)



## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புப் பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 4

யாழ்.மாவட்ட சமுர்த்தி அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்க வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. யாழ்.மாவட்டச் சமுர்த்திப் பணிப்பாளர் எவ்.சி.சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் கலந்துகொண்டு சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கிவைத்தார். (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மஹிந்தவாலேயே அநுர சுதந்திரமாக நடமாட்டம்

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, மே 4

மஹிந்த ராஜபக்ச போரை முடிவுக்குக் கொண்டுவந்ததால்தான் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இன்று புதுக்குடியிருப்புக்கு சுதந்திரமாக செல்லக்கூடியதாக உள்ளது. நாட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி ஆட்சியே அடுத்து அமையவுள்ளது.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நுகேகொடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மொட்டுக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மஹிந்த ராஜபக்ச போரை முடிவுக்குக் கொண்டுவந்ததால்தான் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் புதுக்குடியிருப்புக்குச் சென்று மேடை அமைத்து, மஹிந்தராஜபக்சவைவிமர்சிக்கக்கூடியதாக உள்ளது. மஹிந்த அமைத்த வீதியில்தான் அவர் வடக்குக்குகூட செல்கின்றார். நாம் வேலை செய்தோம். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள்தான் போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அரசியல் ரீதியில், கொள்கை ரீதியில் எம்முடன் மோதமுடியாததன் காரணமாகவே தனிப்பட்ட ரீதியில் சேறுபூச முற்படுகின்றனர்.



பொய்கூறி ஆட்சிக்குவந்த அரசாங்கமாகவே இந்த அரசாங்கம் விளங்குகின்றது. தொழிலாளர்களின் தோளில் ஏறி ஆட்சிக்கு வந்தவர்கள் தொழிலாளர்களை மறந்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ச குற்றமற்றவர் என்பதை அநுர ஆட்சிக்குள்ளேயே நிரூபிப்பதற்கு நாம் முயற்சித்துவருகின்றோம்.

அது நிச்சயம் நடக்கின்றது. எம்மைப் பார்த்து அவர்கள் பயந்தாலும், நாங்கள் அவர்களுக்குப் பயப்படவில்லை என்பதைக் கூறி வைக்க விரும்புகின்றோம். இராணுவத்தைப் பாதுகாப்போம் எனக்கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், நாட்டில் இடம்பெறும் குற்றங்களையெல்லாம் இராணுவம்மீது சுமத்தி, இராணுவத்தின் நற்பெயருக்கு களங்கம் விளைவித்துள்ளனர்- என்றார். (எ-44)

# 500 தமிழ்ப் பொலிஸார் சேவையில் இணைப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 4

2025ஆம் ஆண்டு இறுதிக்குள் 500 தமிழ்ப் பொலிஸாரைச் சேவையில் இணைத்துக்கொள்ளும் ஆலோசனைகள் பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். பொலிஸ் துறையில் 10ஆயிரத்துக்கும் அதிகமான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதுகுறித்து பொலிஸ் திணைக்களத்துடன், நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம் 10ஆயிரம் பொலிஸாரைச் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


முதற்கட்டமாக இவ்வாண்டு 2ஆயிரம் பொலிஸார் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதில் 500 தமிழ்ப் பொலிஸாரை இணைத்துக்கொள்வதற்கான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளோம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# ஆட்பதிவுத் திணைக்களம் இருநாள் இயங்காது

கொழும்பு, மே 4

எதிர்வரும் 6 ஆம் மற்றும் 7 ஆம் திகதிகளில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் அனைத்துச்சேவைகளும் இடைநிறுத்தப்படும் என அந்தத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காரணமாக இவ்வாறு அனைத்து சேவைகளும் இடைநிறுத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




# சோமசுந்தர தேசிகர் மறைவு இந்துமத மக்களுக்கு இழப்பு

## சர்வதேச இந்துமத பீடம் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 4

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் மறைவு பெரும் துயரம் என சர்வதேச இந்துமத பீடச் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வ ரின் மறைவையிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் உள்ளதாவது-

மிகுந்த சாதுவானவர், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவ்வப்போது தன்னால் இயன்ற அளவு குரல்கொடுத்தவர். இந்து மதத்துக்கு ஒரு பெருமை வாய்ந்த ஆன்மீகத் தலைவராகச் செயற்பட்டவர் .

நாவலர் 200ஆவது நூற்றாண்டைக் கொண்டாடுவதற்கு முன்னாள் பிரதமரும் புத்த சாசன மத மற்றும் கலாசார அமைச்சராகவும் இருந்த மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் அலரிமாளிகையில் நாவலர் 200ஆவது நூற்றாண்டை பிரகடனப்படுத்தியபோது தலைமை வகித்தவர். நல்லதொரு ஆன்மீகத் தலைவரை இழந்தது இந்து மத மக்களை வேதனைக்கு உள்ளாகியுள்ளது.

அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய சிதம்பரம் தில்லை வாழ் சிவ நடராஜப் பெருமானை மனதார பிரார்த்தனை செய்து அவரது ஆன்மா ஈடேற்றத்திற்கு அனைவரும் பிரார்த்திப்போம்-என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மன்னார் – கள்ளியடியில் நேற்றுக் கோரவிபத்து!

## பலர் படுகாயம்

மன்னார், மே 4

**மன்னார் - யாழ். பிரதான வீதி, கள்ளியடிப் பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கோர விபத்தில் பலர் படுகாயமடைந்துள்ளனர்.**

மன்னாரிலுள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் பணியாளர்களை ஏற்றிவந்த தனியார் பேருந்து, கள்ளியடிப் பகுதியில் பணியாளர்களை ஏற்றுவதற்காக வீதிக்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இதன்போது குறித்த பேருந்துக்கு நேரெதிரே அதிவேகமாக வந்த ஹண்டர் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்த பேருந்துடன் மோதியதுடன் வீதியில் மோட்டார் சைக்கிளுடன் நின்றுகொண்டிருந்தவர் மீதும் மோதி விபத்தை ஏற்படுத்தியது. இதில் மோட்டார் சைக்கிளில் நின்ற நபர் படுகாயமடைந்ததுடன் அவரது மோட்டார் சைக்கிளும் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. அத்துடன் குறித்த விபத்தில் ஹண்டர் ரக வாகனத்தின் சாரதி, உதவியாளர் ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளதுடன் ஆடைத்தொழிற்சாலைபணியாளர்கள் 9 பேரும் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துக் குறித்து இலுப்பைக்கடவைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-56)



# தமிழரசுக் கட்சிக்கு வாக்களியுங்கள்!

## ஆனந்தசங்கரி வேண்டுகோள்

கிளிநொச்சி, மே 4

இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கே மக்கள் வாக்களிக்கவேண்டும். இந்தத் தேர்தலின் பின்னர் அனைத்தையும் களைந்து ஒற்றுமையாக தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் தமிரசுக்கட்சியைச் சேர்ந்தவர்கள் இணையவேண்டும் என்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2004க்குப் பின்னர் வந்த எந்த அரசுகளும் ஜனநாயகமாக உருவாகவில்லை. ஜனநாயகம் அழிந்துவிட்டது. அதனை நாங்கள் இன்று அனுபவிக்கின்றோம். நாடு அழிவுக்குள் செல்கின்றது.

நான் தமிழரசுக் கட்சியை சேர்ந்தவன் இல்லை. தமிழரசுக் கட்சியுடன் வேறு கட்சிகளையும் இணைத்து தமிழர் விடுதலைக்கூட்டணி உருவானது. அதன் உருவாக்கத்தில் நானும் இருந்தேன். நான் முடிவெடுத்துவிட்டேன். எமது கட்சிக்கு ஆபத்து இருப்பதாக நான் உணர்கிறேன். அவ்வாறான நிலையிலிருந்து நான் இந்த அழைப்பை விடுகின்றேன்.

தமிரசுக்கட்சியைச் சேர்ந்தவர்கள் எம்முடன் இணையுங்கள். அவ்வாறு இணையவேண்டிய காலம் இதுவாகும். தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வா உருவாக்கிய கட்சியே தமிழர் விடுதலைக் கூட்டணி.

எனவே, இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கே மக்கள் வாக்களிக்கவேண்டும். இந்தத் தேர்தலின் பின்னர் அனைத்தையும் களைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணையவேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்புகளை பகிர்ந்து ஏற்க அனைவரும் ஒற்றுமையாக ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ச-113)



# இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், மே 4

அச்சுவேலி வடக்கு சரசாளி சித்திரவேலாயுதர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றத்தை முன்னிட்டு "மிளிர்ந்தருள்பவனே" எனும் பக்திப்பாடல் இறுவட்டு, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வெளியீடுசெய்யப்பட்டது.

நா. சிவராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆலயப் பிரதம சிவாச்சாரியார் இ.நித்திய கஜேந்திரன் ஆசியுரை ஆற்றினார். சைவப்புலவர் கி.வரதராசன் வெளியீட்டுரையையும், செந்தமிழ்ச்சொல்லருவி ச. லலீசன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தினர். இசையமைப்பாளர் சிவா.பத்மஜன் மற்றும் பாடலாசிரியர் சு.சிறீகாந் ஆகியோர் ஏற்புரை வழங்கினர். பாடல் ஆக்கத்தில் பங்களிப்புச் செய்த பாடகர் சாந்தன் கோகுலன், பாடலாசிரியர் சு.சிறீகாந் உள்ளிட்ட கலைஞர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் இவர்களுக்கான நினைவுச் சின்னங்களை வழங்கிவைத்தார். (ச-25,66)

# அர்ப்பணிப்புமிக்கவர் நல்லை ஆதீன முதல்வர்

## அகில இலங்கை இந்துமாமன்றம் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 4

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், கடந்த 44 ஆண்டுகளாக மிகுந்த அர்ப்பணிப்புடனும் நிதானத்துடனும் தமது பணிகளை முன்னெடுத்து ஆதீனத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வந்தவர். அவரது மறைவு துயரத்தில் ஆழ்த்தியுள்ளது என்று அகில இலங்கை இந்துமாமன்றம் இரங்கல் வெளியிட்டுள்ளது.

போரால் சகல மக்களும் நிலைகுழும்பித் தடுமாறிக் கொண்டிருந்த தருணங்களில் எல்லாம் சுவாமிகள் ஆற்றிய பணிகளும் வழங்கிய ஆதரவுகளும் மறக்க வொண்ணாதவை. இறைவன் திருவுளப்படி சமாதி அடைந்த இரண்டாவது குருமகாசந்நிதானம் சுவாமிகள், இட்டு நிரப்பமுடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்திச் சென்றுள்ளார். அவரின் பரிபூரணமடைந்த குருமகாசந்நிதானத்தின் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திக்கிறோம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25)





இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் சாரணிய அணி உருவாக்க ஆரம்ப நிகழ்வு அதிபர் தீ.அபராஜிதன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சாரணிய ஆணையாளர் சி.விக்கினேஸ்வரன் மற்றும் முன்னாள் யாழ். மாவட்ட சாரணிய ஆணையாளர் எஸ். தேவரஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (25,159)

# காஷ்மீர்ப் படுகொலைக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 4

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் பஹல்கம் பகுதியில் கடந்த22 ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் படுகொலைசெய்யப்பட்ட நிலையில் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறையருள்வேண்டி யாழ்ப்பாணத்தில் அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலயத்தில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது முனீஸ்வரன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து மோட்ச தீபங்கள் ஏற்றியும் அஞ்சலிசெலுத்தப்பட்டது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பல்கலை துணைவேந்தர் தெரிவு; பேராசிரியர் பிரதீபன் முன்னிலை

மட்டக்களப்பு, மே 4

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தெரிவில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலைபெற்றுள்ளார்.


துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

அதைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்கள் உட்பட பதவிவழி உறுப்பினர்களும் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்கினர்.

புள்ளிகளின் அடிப்படையில் விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் முதல் நிலையிலும், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர். பல்கலைக்கழகச் சட்டத்தின்படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவுசெய்து, நியமனம் செய்வார்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் பதவிக்காலம் கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. விண்ணப்பங்களின் அடிப்படையில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி துணைவேந்தர் தெரிவுக்கான விசேட பேரவைக் கூட்டம் நடத்தப்பட்டு, முன்னிலை பெற்ற மூவரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டபோதிலும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அந்த முடிவுகளை நிராகரித்து புதிதாகத் தெரிவை நடத்துமாறு கோரியிருந்தார்.

ஜனாதிபதியால் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குத் துணைவேந்தராக எவரும் நியமிக்கப்படாத நிலையில், துணைவேந்தரின் பதவிக்காலம் முடிவுற்ற பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே பதில் துணைவேந்தர்களை நியமித்துள்ளது. (எ-26)



# அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே. 4

அச்சுவேலி மத்திய கல்லூரியில் 2024 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் நா.மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழையமாணவன் லண்டன் மாநகரில் இருந்து வருகைதந்திருந்த து.நிர்மலரோஜன் மற்றும் ஓய்வுநிலை அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ச-25)

# கபிலனுக்கு ஆதரவாக என்றும் துணைநிற்போம்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகரசபை முதல்வர் வேட்பாளர் கபிலனுக்கு ஆதரவாக நாங்கள் துணை நிற்போம் என்று அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லையில் வசிக்காத கபிலன், யாழ்ப்பாணம் மாநகரசபைத் தேர்தலில் வெற்றிபெற்றால், அதற்கெதிராக வழக்குத் தொடரப்படும் என்று வெளியான கருத்துக்கள் தொடர்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கபிலன் சுந்தரமூர்த்தி எமது கட்சியின் முதன்மை வேட்பாளர். அவர் தனி நபர் அல்ல. அவருக்கு பின்னால் எமது கட்சி, அரசாங்கம் உள்ளது. கபிலனுடன் விளையாட முற்படுவது எம்முடன் விளையாட முற்படுவதாகும். சாக்கடை அரசியலின் வெளிப்படாகவே அவரை இலக்கு வைத்து தாக்கி வருகின்றனர் - என்றார். (அ-ம-26)

# வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இம்முறை தேர்தலில் பங்கேற்கமாட்டார்கள்

கொழும்பு, மே 4

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பங்கேற்கமாட்டார்கள் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகக் கருதப்படாமையால் இந்தமுறை வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பங்கேற்க மாட்டார்கள். ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆசிய கண்காணிப்பு அமைப்பு உள்ளிட்ட வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்கள் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களுக்காக நாட்டுக்கு வருகைத் தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**SP Tourist Hotel**

Job Vacancies
01. It Technician-01
02. Assistant Accountant-02
03. Restaruant and Hotel Receptionist-02
04. House Keeper-04

Full Time and Part time also available

Contact: 076 574 7180 Manager
No. 873, Hospital Road, Jaffna.

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 3/4 Km தூரத்தில் பரப்பு 22 இலட்சம். 5+3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

077 446 0241

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலியில் நான்கு அறைகள், இரண்டு கோல், கிச்சின் உடன் நாள் வாடகைக்கு கொடுக்கப்படும். 10 நாட்கள், 3 கிழமைகள், 2 மாதங்கள் அடிப்படையில் முறையில் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 959 7158

**வேலை வாய்ப்பு**

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் பலசரக்கு கடைக்கு கீழ் காணும் ஆட்கள் தேவை.
- Computer Billing + Cashier
- Administration
- Sales Assistant (உதவியாளர்)
- Packaging (பொதியிடல்)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
077 419 5209

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 02 . 1943



மறைவு 02 . 05 . 2025

**மேரி யோசேப்பின் மாசில்லா**

பெரிய விளான். இளவாலையைப் பிறப்பிடமாகவும். கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி யோசேப்பின் மாசில்லா அவர்கள் நேற்று முன்தினம் (02.05.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா-அன்னேசம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை- அன்னம்மா தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற யோசெப்பின் பாசமிகு மனைவியும் ஆன் பிரியசாந்தினி. பிரதீபா காயத்திரி ஆகியோரின் பாசமிகு தாயும் கஜபதியின் அன்பு மாமியும் வருண். சுருதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் புளோரன்ஸ் செல்வநாயகி. எட்வேர்ட் ரட்ணசிங்கம் மற்றும் அல்பிரட் திசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் மேரி யோசேப்பின் பரிமளம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை 12/1 நெல்லியடி ஒழுங்கை. கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. நாளை (05.05.2025) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு 5ம் கட்டை. பெரிய விளான். இளவாலையிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். தொடர்ந்து இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் இறுதித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, இளவாலை புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.12/1 நெல்லியடி ஒழுங்கை.
கொக்குவில்

தகவல்: மகள்

# இரங்கல் செய்தி



2வது நல்லை திருஞானசம்பந்த குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி அவர்கள் சமாதி நிலை அடைந்த செய்தி அறிந்தோம்.

சாமிகளின் ஆன்ம ஈடேற்றம் அடைய இறைவனை நாமும் பிராத்திக்கின்றோம்.

சுபம்

தர்மகர்த்தா சபை
யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்
(நாச்சிமார் கோவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிக்குடித்தலைவர் வேட்பாளர்களுடன் கலந்துரையாடல்

கொழும்பு, மே 4
ஆதிக்குடிகளின் தலைவர் உருவருகே வன்னிலா எத்தோ தனது பிரதேசத்தில் போட்டியிடும் உள்ளூராட்சி வேட்பாளர்கள் அனைவரையும் அழைத்து "எமது பிரதேசத்திற்கு என்ன செய்யப்போகிறீர்கள்" என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார். இந்தக் கலந்துரையாடலுக்கு ஒன்பது கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, சர்வஜன அதிகாரம், பொது ஜன எக்சத் பெரமுன மற்றும் சுயேச்சைக் குழு ஆகியவற்றின் வேட்பாளர்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.

வேட்பாளர்கள் உரையாற்றுகையில், அவர்களுக்கிடையே ஆவேசப்பட்ட சந்தர்ப்பத்தில், உங்களது சேறுபூசும் வேலையை இங்கு வைத்துக்கொள்ளாதீர்கள் என ஆதிக்குடிகளின் தலைவர் நிலைமையைக் கட்டுப்படுத்தினார்.

(ச-41-6)


## பணிப்பெண் தேவை

கொக்குவில் 2 பேருக்கு வீட்டில் தங்கியிருந்த சமையல் மற்றும் வீட்டு வேலைகளை செய்வதற்கும் பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 665 3425

## கண்ணணீர் அஞ்சலி



தோற்றம் 23.11.1955
மறைவு 02.05.2025

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி அ.அனோஜா அவர்களின் பாசமிகு தந்தை

**ஆறுமுகம் இலங்கைநாயகம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயருறுகின்றோம். தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூர் கோவிலில் இருந்த 450M தூரத்தில் 4 அறைகள், 2 Hall, 1 Kitchen (மாத வாடகை 50 000) உடனான வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 306 8993, 070 711 3861

## விற்பனைக்கு

- பொட்டுக் கூலர் (டபிள்டோர்)
- பொட்டுக் கூலர் (சிங்கிள்டோர்)
- A/C
- குளிர்சாதனப்பெட்டி
- கட்டில் + மெத்தைகள்

தொடர்பு: 074 147 2445

## தேவை

விற்பனைப் பிரதிநிதி மில் வேலை தெரிந்தவர்கள், மில் உபகரணங்கள்

தொடர்பு: 077 772 2215

## காணி விற்பனைக்கு

கட்டுடை மானிப்பாய் கோவிட்பற்று எழுமுள்ளி ஒழுங்கையில் 6பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.

077 787 7843

## தங்குமிட விடுதியும், மண்டபமும் குத்தகைக்கு உண்டு




கல்வியங்காட்டில் விளையாட்டரங்க வீதியில் (GPS - Road) தங்கும் விடுதியும், நிகழ்வுகளுக்கான மண்டபமும் குத்தகைக்கு வழங்கப்படும்.

077 930 0083
076 525 4405

## காணி தேவை

மரதனாமடம் விளாத்தி அடி, உரும்பிராய் கிராமம் J/164 உரும்பிராய் வடக்கு Ds கோப்பாய் 4 பரப்பு 16.69 குளி, வெறும் காணி, பயிர்செய்கை வீடு கட்டுவதற்கு ஏற்றது. உறுதி பிரக்கராசியுடன்

தொடர்புகளுக்கு:
திரு.ஆதித்தன்: 077 616 9254 (வட்ஸ் அப்)
டாக்டர் அரஸ்: +44 794 141 9205(வட்ஸ் அப்)
திரு.டினேஸ்: +94 77 087 0837 (வட்ஸ் அப்)

## தேவை

நாவற்குழி என்னும் இடத்தில் வீட்டில் தங்கியிருந்து தோட்ட வேலை, வீட்டு வேலை செய்ய கணவன் மனைவி தேவை..

தொடர்புகளுக்கு: 077 766 7134

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 02 . 1972



மறைவு 14 . 04 . 2025

**அமரர் தர்மலிங்கம் நடனேந்திரன்**
(முன்னாள் தவிசாளர் வலிமேற்கு பிரதேசசபை)

திதி: சித்திரை மாத வளர்பிறை ஸ்ப்தமி

கள்ளங்கபடமல்லா இதயம் கொண்டவரே!
கறைபடியா கரங்கள் கொண்டவரே!
உங்கள் நீங்கா நினைவுகளால்
நீர் மல்கும் கண்களுடன்..
மனைவி உற்றார் உலகோர்
ஏங்கா நாளில்லை. ஏன் மறைந்தீர்
எம்மைவிட்டு?
ஆண்டு ஒன்று போனாலும் இவ்வுலகில்
நான் வாழும் வரை உங்கள் நினைவுகள்
நீங்காமல் நிலைத்திருக்கும்.

பிள்ளையார் கோயில் வீதி,
சித்தங்கேணி.

மனைவி
077 759 3797

## மணமகள் தேவை

1993, இந்து, ஸ்வாதி , DOCTOR
பூர்வீகம் - நயினாதீவு, வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகன் பதிவு இல: 11646.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1994, இந்து, மஹம், ENGINEER
பூர்வீகம் - காரைநகர், வதியுமிடம் - UK
மணமகன் பதிவு இல: 11683.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## பணி நிலை வெற்றிடம்

பிரபல காப்புறுதி நிறுவனத்திற்கு முகாமையாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 076 602 1594, 076 711 2102

## மணமகன் தேவை

1995, இந்து, கார்த்திகை, TEACHER
பூர்வீகம் - பண்டத்தரிப்பு, வதியுமிடம் - அராலி
மணமகள் பதிவு இல: 11603.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## வீட்டுப் பணிப் பெண் தேவை

கொக்குவிலில் அமைந்துள்ள வீட்டில் தங்கி நின்று பெண் ஒருவரை பராமரிப்பதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 314 6013

## வீடு வாடகைக்கு தேவை

தாய்,மகள் மருமகனுக்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 076 661 9476, 070 583 5184

## காணி விற்பனைக்கு

வவுனியா ஓமந்தையில் 10 ஏக்கர் உறுதியுடனான காணி விற்பனைக்குண்டு. 559 தென்னை மரங்கள், தேசிக்காய் மரங்கள், 12 கருத்தக்குளம்பன் மா மரங்கள், 14 விலாட்டு மாமரங்கள், செர்ரி, பலா, ஜம்பு போன்ற மரங்கள், 3Cottages, 1பணியபளர் அறை, 1Hunt Cottage, 7000 Broiler Cottages, 100 Goat Cottage. 2 கிணறுகள் மற்றும் பல வசதிகளுடன்

தொடர்பு: 077 060 4125
Whats app: 076 367 8333

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அண்மையாக உள்ள நவீன வசதிகளுடன் கூடிய புதிய வீட்டு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 016 1864


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு : 06.04.1939 உதிர்வு : 28.04.2012

**அமரர் திருமதி சிவரூபராணி (இந்திரா) செந்திவடிவேலு**

**திதி: சப்தமி (04.05.2025)**


அன்பின் உறைவிடமாய் எமை அன்போடு அணைத்து
நாங்கள் எல்லோரும் நலமே வாழ
அன்பு மழை பொழிந்து எமை வாழவைத்த தெய்வமே!
ஆண்டுகள் பன்னிரெண்டு கடந்தாலும் உங்கள் நாமம்
எந்நாளும் எம் நெஞ்சங்களை விட்டகலாது.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

"மாதர்வளவு"
மல்லி ஓடை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(CS/3080) J-1

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 02 . 1936

மறைவு 03 . 05 . 2025

## ஆறுமுகம் நடராசா (மணியம்)

உடுவில் கிழக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கெற்பேலி மேற்கு மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடராசா (மணியம்) அவர்கள் நேற்று (03.05.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் புத்திரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - புஸ்பராணி மற்றும் இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருபாகரன் (பிரதி அதிபர் (யா/கச்சாய் மகா வித்தியாலயம்), சுதாகரன், குலரூபி, சிவரூபி, மதுரகரன் (சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோஸ் யாழ்ப்பாணம்), மோகனதாஸ், கிருஸ்ணரூபி (இராணுவ மகளிர் படை, 2ம் பிரிவு, மதவாச்சி), பகீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாஜினி, காமாட்சி, தர்மசீலன், ஜீவலதா (வலி தெற்கு பிரதேசசபை பொது நூலகம் ஏழாலை), சிவராணி (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஐங்கரன் (ஊவாவெல்லச பல்கலைக்கழகம்), தாட்சாயினி (யாழ் பல்கலைக்கழகம்), அபிசாயினி (பல்கலைக்கழகம்), சுஜன், சுமன் (பிரான்ஸ்), சிந்துஜா, தனிஸ், தயாஸ் - துசாந்தி, தனுசியா - சோபிதன் (யாழ்பல்கலைக்கழகம்) சோபனா (பல்கலைக்கழகம்), லதுஷிகன் (யா/ மகாஜனக்கல்லூரி) சஷ்டிகா, பவித்றன், திவ்யந்தன், அஷ்சாயினி (யா/ உருவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும், சதுர்ஷிகாவின் அன்புப் பூட்டனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விடத்தற்பளை சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
077 699 1059


*CR/44811) J-1

# A/L வர்த்தக வகுப்புக்கள்

G.C.E A/L கணக்கீடு,பொருளியல் , வணிக கல்வி ஆகிய பாடங்கள் Zoom வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிமூலம் கற்பிக்கப்படும்.அனுபவமுள்ள பட்டைய கணக்காளரினால் கற்பிக்கப்படுகிறது.2025 பரீட்சார்த்திகளை தயார் செய்ய திட்டமிடபட்டுள்ளது.ஆர்வமுள்ளவர்கள் இணைந்து கொள்ளலாம்.

Sugumar @ bigpond.net.au
James V Sugumar ACA,FCPA

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 . 09 . 1936

மறைவு 15 . 04 . 2024

**அமரர் தம்பு சின்னத்துரை**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அன்புடனே பாசத்தோடு எமை வளர்த்து
அவனியிலே எம்மைப் பேணிக் காத்து
சீராக கல்வியிலே சிறந்த சேவை
சிரித்த முகத்துடன் உறவுதனைப் பாராட்டி
பேராக வாழ்ந்தவெங்கள் பெரு மகனார்
பிரிந்தின்று ஆண்டு ஒன்று ஆனதுவோ
நாம் வாழும் காலம் வரை எம்மோடு
என்றும் உங்கள் நினைவுகளுடன்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

49, சாஸ்திரியார் வீதி,
அரியாலை.

(CS/3088) J-1

குடும்பத்தினர்

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 23 • 10 • 2005

மறைவு 21 • 03 • 2025

**கடந்த 21.03.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது செல்வப் புதல்வன்**

## பிறேமானந் சாருஜன்

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

மேலும் அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து துக்கத்தில் பங்கு கொண்டும், நேரிலும், தொலைலபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், அஞ்சலி பதாதைகள் வெளியிட்டோர் மற்றும்மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பூங்கனிச் சோலை,
கோண்டாவில்.

(CS/58143) J-1

குடும்பத்தினர்
077 397 6203

# 2325 படையினர் கைது

முப்படைகளிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிச் செல்லாத அதிகாரிகள் உட்பட 2 ஆயிரத்து 325 படையினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டனரென பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களில் 2,017 பேர் இராணுவத்தினர் என்பதுடன் 145 பேர் கடற்படையினர் மற்றும் 163 பேர் விமானப்படையினராவர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 11 . 1956



மறைவு
30 . 04 . 2025

## கந்தசாமி அற்புதராசா

கோப்பாய் இலகடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அற்புதராசா அவர்கள் கடந்த (30.04.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், சரோஜினிதேவி, செல்வராஜா (பிரான்ஸ்), சகுந்தலாதேவி (பிரான்ஸ்), சாரதாதேவி, சுசீலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-05-2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

**இலகடி**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**077 009 0304**
**077 522 7703**

(CS/ 58164) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 02 . 1945



மறைவு
03 . 05 . 2025

## யோகாம்பிகை சபாரத்தினம்

ஆசிரியர் வீதி, பெரிய அரசடி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. யோகாம்பிகை சபாரத்தினம் அவர்கள் நேற்று (03.05.2025) சனிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா (தலைமை ஆசிரியர், சங்கத்தானை சைவத்தமிழ் இந்துக்கலவன் பாடசாலை) - சின்னம்மா தம்பதியரின் பாசமுள்ள கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், செல்லையா சபாரத்தினம் (முன்னாள் பிரதி அதிபர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், தயாளினி (கனடா) லதாளினி, பிரேமினி (SLAS, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), சுபாசினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), நிரஞ்சனி (அபிவிருத்தி உத்தியோகத்தர்,பிரதேச செயலகம், கோப்பாய்), ஜனனி (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சரஸ்வதிப்பிள்ளை மற்றும் யோகரத்தினம் (கனடா), சதாசிவம் (யாழ்ப்பாணம்), சிவதாசன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புமிகு சகோதரியும், பிரபாகரன், பொன்னம்பலம், சிவானந்தன், சுதாகர், வேணுகானன் ஆகியோரின் மாமியாரும், அக்சயன், அக்ஷயா, அரன், ஆரண்யா ஆகியோரின் அருமை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**ஆசிரியர் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**021 227 0633, 077 414 1751**

(CS/58163) J-1

# பணிப்பெண் தேவை

கொக்குவில் 2 பேருக்கு வீட்டில் தங்கியிருந்த சமையல் மற்றும் வீட்டு வேலைகளை செய்வதற்கும் பணிப்பெண் தேவை.

**தொடர்பு: 077 665 3425**

# வல்வை முதியோர் இல்லம்


வீட்டுச் சூழலில் கனிவு நிறைந்த உபசரிப்புடன் சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்ட நிறை உணவு வழங்குகின்ற வல்வை முதியோர் இல்லம் புதிய முதியவர்களை இணைப்பதற்கு தயாராக உள்ளது. இல்லத்தில் இணைய விரும்பும் முதியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி

**077 810 6857, 077 154 2067, 021 226 5551**
**www.valvaieldershome.com**
**contact@valvaieldershome.com**

# மரண அறிவித்தல்

பிறப்பு
09 . 03 . 1945



மறைவு
29 . 04 . 2025

## அருள்பிரகாசம் அருள்லீல்லி நாயகம்

**(சமாதான நீதவான், பண்டத்தரிப்பு)**

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருள்பிரகாசம் அருள்லீல்லி நாயகம் (சமாதான நீதவான், பண்டத்தரிப்பு) அவர்கள் கடந்த (29.04.2025) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அருள்பிரகாசம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி யோசேப்பு -றோசம்மா தம்பதியரின பாசமிகு மருமகனும், இந்திராவின் அன்புக் கணவரும், அனஸ்ரன் மயூரன், ஜோய் டிலக்ஷன், ஆன்சுலக்ஷனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (05.05.2025) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**076 949 2335**

(CS/58157) J-1

# பகிடிவதையைத் தடுப்பதற்கு புதிய நடைமுறை

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் மாணவர்களைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் அதிகாரியொருவரை நியமிக்க கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக நிர்வாகசபையின் கீழ் செயற்படும் வகையில் அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனரெனக் பிரதியமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறவுள்ளது.

கலந்துரையாடலுக்கு முன்னர் பகிடிவதைக்கு எதிரான நடவடிக்கையாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயிரிழந்த சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவனின் மரணம் தொடர்பிலான விசாரணை அறிக்கையும் இந்தக் கலந்துரையாடலின்போது முன்வைக்கப்படவுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பம் பொறியியல் பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்ற மாணவர் ஒருவர், மன அழுத்தம் காரணமாக கடந்த 29 ஆம் திகதி உயிர் மாய்த்துக்கொண்டுள்ளார். இதுகுறித்து உயர் கல்வி அமைச்சு அறிக்கைஒன்றைவெளியிட்டு, இந்த விடயம் குறித்து முழுமையான விசாரணை நடத்த விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கை கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தது. (ச–இ)

# மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

**077 334 1281**

# THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம், சங்கானை. 3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாக கதைக்கப் பயில
By: ந. விக்னேஸ்வரன் ஆச்சார்யார் (அரச ஓய்வூதியர் M.L.T (M.L.S) 27 வருட அனுபவம்,
பிரான்பற்று வீதி, சங்கானை.

**Tel: 077 675 1649**

# காணி விற்பனைக்கு

வடக்கு புன்னாலைக்கட்டுவன் குளத்தடி நாச்சிமார் கோவில் (பலாலி றோட்) அண்மையில் 41 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 071 944 7888**

# காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் மயிலிட்டி பிரதான வீதியில் யாழ்ப்பாணம் விமானநிலையம், மயிலிட்டி உப பிரதேச அலுவலகத்திற்கு அருகாமையில் பண்ணை அமைப்பதற்கு ஏற்ற 76 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை

**077 341 0005, 077 821 3472**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிறைவான சமூகசேவையை நிறைவேற்ற ஆணை தருக!

## சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் நாகலிங்கம் குமணதாசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 4

நிறைவான சமூக சேவையை நிறைவேற்றுவதற்காக மக்கள் எனக்கு ஆணை வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளராக, ஏழாம் வட்டாரத்தில் (ஜே/91) போட்டியிடும் நாகலிங்கம் குமணதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூக சேவையில் கடந்த சில காலமாகவே என்னை அர்ப்பணித்து வருகின்றேன். சமூக சேவையில் ஈடுபடுவதற்கு அரசியலில் தான் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. இதனால்தான், அரசியலுக்கு வருவதற்கு முன்பிருந்தே சமூக சேவையை நான் ஆத்மார்த்தமாகவும் ஆழமாகவும் முன்னெடுத்து வருகின்றேன். எனினும், நிறைவான சமூக சேவையில் ஈடுபடுவதற்கு அரசியல் பின்னணி வழங்கும் அதிகாரப்பலம் நிச்சயம் அவசியம். இதை சமூக சேவையை நான் முன்னெடுத்தபோது பல தடவைகள் உணர்ந்துள்ளேன். இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கவேண்டும் என்ற முடிவுக்கு நான் வந்தமைக்கான காரணமும் அதுதான். எனவே, எனது கடந்த காலச் செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, எனது சேவையும் வேலைத்திட்டங்களும் முழுமைபெற ஆணை வழங்கவேண்டும் என்று அன்புரிமையுடன் மக்களை அழைக்கின்றேன் - என்றார். (அ-ம-இ)

### பஹல்காம்...

இலங்கைக்குள் ஊடுருவும் வாய்ப்புள்ளதாக இந்திய அதிகாரிகள் நேற்று எச்சரிக்கை விடுத்தனர்.

சென்னையில் இருந்து பயணித்த விமானத்தின் ஊடாகவே, அவர்கள் இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கவுள்ளனர் எனத் தகவல்கள் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, சந்தேகநபர்கள் பயணிப்பதாகக் கூறப்பட்ட விமானம் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. எனினும், அவ்வாறு எவரும் கைதுசெய்யப்படவில்லை. (அ-ம)

### சோமதேவ...

லங்கள் மீட்கப்பட்ட பகுதியில், இம் மாதம் 15ஆம் திகதியன்று அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த அகழ்வுப் பணிகளில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ராஜ் சோமதேவவும் கலந்துகொள்ளவுள்ளார். இந்த நிலையிலேயே, நேற்று அவர் சம்பவ இடத்தில் கள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். (அ-ம-26)

### நிச்சயமாக...

ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய நேர்காணலிலேயே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் ஜனாதிபதி அநுர கருத்துக் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நீண்டகால எதிர்பார்ப்புகளும், ஐரோப்பிய ஒன்றியம் முன்வைக்கும் கருத்துகளும் சமாந்தரமுடையவையாக உள்ளன. இந்த விடயத்தை நாங்கள் மிகவும் வெளிப்படையாக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

1979ஆம் ஆண்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவந்தபோது அதற்கு எதிராகக் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு, சிறைக்குச் சென்றவர்கள் எமது உறுப்பினர்கள். அதேபோல 1988 ஆம் மற்றும் 1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் நாங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டோம். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் போராட்டங்களை நடத்தினோம். எனவே, பயங்கரவாதத் தடைச்சட்டம் எந்த நிபந்தனையும் இல்லாமல் நிச்சயமாக நீக்கப்படும். இந்த விடயத்தில் ஓர் அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

ஆனால், சட்டமொன்றை இரத்துச் செய்யும்போது, சட்டத்தில் வெற்றிடம் இருக்கக்கூடாது. அவ்வாறான வெற்றிடத்துக்கு இடமளிக்காமல், சட்டத்தை ஈடுசெய்யக் கூடிய வகையில் புதிய சட்டம் அவசியம். எனவே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவும், புதிய சட்டத்தைக் கொண்டுவரவும் குழுவொன்றை நியமித்துள்ளோம் - என்றார். (அ-ம-44)

### நாடாளுமன்றத்...

பார்த்து தமிழ்க் கட்சிகள் புலம்ப ஆரம்பித்துள்ளன. நாங்கள் மிகவேகமாக யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்பி வருகின்றோம்.

தமிழ் மக்களுடைய தன்மானத்தைத் தேசிய மக்கள் சக்தி அரசின் கீழேயே கட்டிக்காக்கமுடியும். நாடாளுமன்றத் தேர்தலில் வீட்டுக்கு அனுப்பப்பட்ட நபர்கள், தோல்வியடைந்த விரக்தியில் எம்மை விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர். சாக்கடைக்குள் வீழ்ந்துள்ள தமிழ்க் கட்சிகள் எம்மீது சாக்கடை இறைப்பதாகக் கூறுகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட எமது மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தமிழ்க் கட்சிகள் அவதூறு பரப்புகின்றன. ஜனாதிபதி அநுரவை யாழ்ப்பாணத்தில் கால்வைக்கவிடமாட்டோம் என்று மக்களால் நிராகரிக்கப்பட்ட தமிழ்க் கட்சிக்காரர்கள் கூறுகின்றார்கள். இவ்வாறு கூறுபவர்களால் தான் யாழ்ப்பாணத்தில் கால்வைக்கமுடியாமல் உள்ளது - என்றார். (அ-ம-26)

### ஈழத்துப்...

அஷ்வினி அம்பிகைபாகர், யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த கவிஞர் அம்பி அம்பிகைபாகரின் பேர்த்தியாவார். ஆளுங்கட்சியான தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட்ட அவர், தனது தொகுதியில் 66 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அஷ்வினி பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற்கட்சி மீண்டும் வெற்றிபெற்று ஆட்சியைத் தக்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### தீவகப்...



யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அலுவலகத்தில், யாழ். மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்டப் பதில் செயலருமான மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில், கடற்படையினரின் பங்குபற்றலுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கடல்வழியாகத் தீவகப் பகுதிக்குத் தேர்தல் கடமைகளுக்காகச் செல்லவுள்ள அலுவலர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பயண ஒழுங்கு தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

குறிகாட்டுவான் படகுத் துறையிலிருந்து நெடுந்தீவுக்கு வடதாரகை கப்பல் மூலமும், நயினாதீவுக்குத் தனியார் படகு மூலமும் நாளை காலை 9 மணியளவிலும், ஊர்காவற்றுறைப் படகுத் துறையிலிருந்து எழுவைதீவு மற்றும் அனலைதீவுக்கு கடற்படை படகுகள் மூலம் நாளை காலை 9 மணியளவிலும் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

### 10,000...

தெரிவித்துள்ளது. ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறும் ஏழாவது சந்தர்ப்பம் இதுவாகும். கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மந்தமான நிலையே காணப்படுகின்றது.

அதிகளவான வேட்புமனுக்கள் நிராகரிப்பு, நீதிமன்றத்தில் நடைபெற்ற தொடர்ச்சியான வழக்குகள் என்பன உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் பொதுமக்கள் பெரியளவு ஆர்வம் காட்டாமைக்குப் பிரதான காரணங்களாக அமைந்துள்ளன. 339 உள்ளூராட்சி மன்றங்களில் 114 உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே ஒரு வேட்புமனுகூட நிராகரிக்கப்படவில்லை. இது சவால் மிக்கதொரு நிலைமையாகும். 2010ஆம் ஆண்டிலிருந்து மதிப்பிடும்போது இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலே மிகக் குறைந்தளவான செலவில் நடத்தப்படும் தேர்தலாகவும் காணப்படுகிறது. ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களிலும் மிகக் குறைந்தளவிலேயே விளம்பரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. 49 அரசியற்கட்சிகளும், 75 சுயாதீனக் குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல்செய்துள்ளபோதிலும், 3 பிரதான கட்சிகள் மாத்திரமே நேரடிப் பரப்புரையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளன - என்றார். (அ-ச-இ)

### குளத்தில்...

உயிரிழந்துள்ளான். இந்தத் துயரச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பூநகரி ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் மலர் வண்ணன் விதுஷன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். (அ-ம-315)

### மின்கட்டணம்...

விலை அதிகரிப்பு பதிவாகுவதற்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன. இந்த விலை உயர்வு எதிர்வரும் ஜூன் மாதம் முதல் அமுலுக்கு வரும். கடந்த டிசெம்பர் மாத மின்கட்டணத்தை விட இது அதிகமாக இருக்காது. மேலும், ஆண்டுக்கு இருமுறை நடைபெறும் மின்சார விலைத் திருத்தத்தின்படி இந்த விலைத் திருத்தம் செய்யப்படும். மின்சாரசபையின் 220 பில்லியன் ரூபா கடன் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதி மின்சார கட்டணத்தில் ஈடுசெய்யப்படும் - என்றார். (அ-ம-இ)

### கண்ணிவெடி...

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின்போது புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் இன்னமும் முழுமையாக அகற்றப்படவில்லை. அண்ணளவாக, 23 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகளை அகற்றவேண்டியுள்ளது. அந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மக்கள் வாழக்கூடிய பிரதேசங்களாக நாங்கள் விரைவில் அவற்றை மாற்றுவோம்.

ஒவ்வொரு கண்ணிவெடியையும் அகற்றுவது மக்களின் நல்வாழ்வுக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் இன்றியமையாதது. எனவே இந்த முயற்சியில் சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடிகளை அகற்றுவது என்பது உடல் ரீதியான அச்சுறுத்தல்கள் மற்றும் ஆபத்தை நீக்குவது மட்டுமல்லாமல், மக்களின் கண்ணியம், வாழ்வாதாரம் மற்றும் அமைதியான வாழ்க்கை நிலைமைகளை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டது - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள புடைவை கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- காசாளர்-(ஆண், பெண் இருபாலரும்)
- ஆட்டோ ஓட்டுனர்

தொடர்பு: 077 844 8045

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலியில் நல்லூர் கோவிலுக்கு 1.2 Km தூரத்திலும் பலாலி வீதியில் இருந்து 500m தூரத்திலும் மருத்துவமனை, Hotel, கல்விநிறுவனம், மற்றும் வீட்டுத்திட்டத்திற்கேற்ற 22 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொலைபேசி இல: 076 091 8505
WhatsApp: 076 091 8505

## காணி விற்பனைக்கு

நாவற்குழி-55 பரப்பு, 71/2
அராலிதுறை-200 பரப்பு
வாடகைக்கு கடையும் வீடும்
யாழ் நகரில் உண்டு.


தொடர்புகளுக்கு:
077 665 9736, 076 071 2676
077 662 6117

## கடைத்தொகுதி விற்பனைக்கு

இராமநாதன் வீதியில் (பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்) அமைந்துள்ள கடைத்தொகுதியுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு +6586783788 என்னும இலக்கத்திற்கு வட்சப்பில் தொடர்பு கொள்ளவும். (தரகர் தேவையில்லை)


## மரண அறிவித்தல்



### பிரான்சிஸ் சேவியர் ஸ்பென்சர் ஜோசவ் (ராஜா)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் நோர்வே (பேர்கன்) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் சேவியர் ஸ்பென்சர் ஜோசவ் (ராஜா) 29.04.2025 அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர் மற்றும் லில்லி ஆகியோரின் அருமை மகனும் கிறேத்த பிரான்சிஸ் சேவியர் (நோர்வே) (கீர்த்தியின்) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற புளோறன்சியா (ஜொய்சி), விவியன், மேரி பெனிக்னா (பபா), கிளறன்சியா (ரதி) (கனடா), புளோறிடா (மதி) (ஜேர்மனி) மற்றும் றுபீனா (ராஜி) (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் றெஜி சொலமன், இராஜநாயகம், பிலிப், அன்ரனி (கனடா), தாசன் (ஜேர்மனி), பாஸ்கரன் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரது இரங்கற் திருப்பலி திங்கட்கிழமை (05.05.2025) அன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்று நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

145/9 கதீற்றல் ஒழுங்கை,
பாங்ஷல் வீதிக்கருகில்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 775 4591, 076 981 0545

# பிரபாகரனுக்குச் சிலைவைக்க முடியுமெனில் அதை மிகவும் பிரமாண்டமாகச் செய்வோம்!

## ஜே.வி.பி.தான் வரவேண்டுமென்ற அவசியமில்லை
## முன்னாள் எம்.பி. சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 4

தேசியத் தலைவர் பிரகாகரனுக்குச் சிலைவைக்க முடியுமாக இருந்தால், உலகமே வியக்கும்படியான சிலையை நாங்கள் நிறுவுவோம். எனவே, ஜே.வி.பி.யினர் எமது காதில் பூசுற்றக் கூடாது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பேரவையின் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தலில் பலவிதமான பொய்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மாநகரசபை, வல்வெட்டித்துறை நகர சபையையும் கைப்பற்றுவதற்காக ஜே.வி.பி அமைச்சர்கள் குழாம் யாழ். மாவட்டத்தில் நடமாடுகிறது. தேசியத் தலைவருக்கு வெண்கலச் சிலை அமைக்கப்படும். வேலுப்பிள்ளை பார்வதியம்மா பெயரில் இறங்குதுறை அமைப்போம் என தேசிய மக்கள் சக்தி பாடல்களை வெளியிட்டுள்ளது. இதனை அமைச்சர் சந்திரசேகர் வெளிப்படையாக அறிவிப்பாரா என சவால் விட்டேன். ஆனால், அவர் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. தமிழீழத் தேசியத் தலைவருக்கு நாங்கள் சிலைவைப்பதாக இருந்தால், இந்தியாவில் 100 அடியில் எவ்வாறு திருவள்ளுவர் சிலை, பட்டேல் சிலை பிரம்மாண்டமாக நிறுவப்பட்டதோ அதுபோல் தமிழீழத் தேசியத் தலைவருக்கு வல்வெட்டித்துறை கடலுக்கு நடுவிலே சிலையை நாங்கள் நிறுவோம். அது போல் வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனையில் தேசியத் தலைவரின் பெற்றோரின் பெயரில் கதிரியக்க சிகிச்சை பிரிவு உருவாக்கப்படும்.

எனவே தேசியத் தலைவருக்கு சிலை வைக்கப் போவதாக ஜே.வி.பியினர் எங்கள் காதில் பூசுற்றக்கூடாது - என்றார்.

(ம-26)


## காணி விற்பனைக்கு

அறுகுவெளியில் A32 பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
Rajeephan Shanththirasekaran
077 209 8826

## வேலை வாய்ப்பு

எரிபொருள் நிரப்புனர்.
ஆர்வமுள்ளோர் அலுவலக நேரத்தில் (திங்கள்-வெள்ளி) 9a.m to 5p.m நேரில் வருகை தரவும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

## சொகுசு வாகனங்கள் Jeep (SUV) (4WD) வாடகைக்கு விடப்படும்.

எம்மால் குளிரூட்டப்பட்ட (4WD) Jeep ரக சொகுசு வாகனங்கள் மாதாந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் சாரதியுடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு: 077 553 3019

## வேலை வாய்ப்பு

யாழ்நகரில் அமைந்துள்ள ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard Ware) நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு. ஆண்.பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 076 151 7481
077 494 9683

## கடை வாடகைக்குத் தேவை

சாவகச்சேரியில் கடை வாடகைக்குத் தேவை

தொடர்புகளுக்கு: 076 313 7386
070 610 9151

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 50 வயதிற்கு மேற்பட்ட ஆண் வேலையாட்கள் தேவை.
பில் கணக்கு எழுதக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம்-60 000/=

தொடர்புகளுக்கு:
077 480 3379

## வாடகைக்கு உண்டு

அலுவலகங்கள் தனியார் வகுப்புக்கள் நடாத்துவதற்கு இடவசதி வாடகைக்கு உண்டு.
200m From Jaffna University
500m From Northen Central Hospital

077 888 5622

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
Whats app:-
+61 421 290 240

(CS/57250) J-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08


# சஞ்சீவி

Registered as a Newspaper

பருவம் எனைத்துள பல்லின்பால் ஏனை
இருசிகையும் உண்டீரோ என்று – வரிசையால்
உண்ணாட்டம் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்
எண்ணார் அறிவுடையார்.

– நாலடியார்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | சித்திரை 21 | ஞாயிற்றுக்கிழமை (04.05.2025) | சிகரம் :143




# மீன்



# சட்டிக்குள்ளேயே இருக்கட்டும் அடுப்புக்குள் விழக்கூடாது

○ நிலாந்தன்

உப்புக்குத் தட்டுப்பாடு. ஒரு கிலோ உப்புப் பைக்கெற் 300ரூபாவுக்கு மேல் போகிறது. இத்தனைக்கும் இலங்கை ஒரு தீவு.சுற்றிவர உப்புக்கடல்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சிசபை பரப்புரைக்கு அள்ளிக்கொட்டுவதற்கு தாராளமாக நிதி இருக்கிறது. தமிழ்ப் பகுதிகளில் பிரமாண்டமான கூட்டங்களை தேசிய மக்கள் சக்திதான் அதிகம் ஒழுங்குபடுத்துகின்றது.

கிராமங்களிலும் நகரங்களிலும் அவர்கள் தமது இருப்பைக் காட்சிப்படுத்தும் விதத்தில் தமிழ்க் கட்சிகளிடம் இல்லாத ஓர் உத்தியைப் பயன்படுத்துகிறார்கள். பூட்டிக்கிடக்கும் ஒரு கடை அல்லது ஒரு மண்டபம் அல்லது ஒரு முழிப்பான இடம் போன்றவற்றில் கவிழ்த்துவிடப்பட்ட 'பானா' வடியில் ஒரு முகப்பை நிறுவுகிறார்கள்.அல்லது தமது சுவரொட்டிகள் பதாகைகள் மூலம் அப்படியொரு வாசலை உருவாக்குகிறார்கள். அது தேசிய மக்கள் சக்தியின் வாசல் என்ற ஓர் உணர்வை மக்களுக்குக் கொடுக்கும். அந்த முகப்பில் வாசலைத் தவிர ஏனைய எல்லாப் பரப்புகளையும் சுவரொட்டிகளால் நிரப்புகிறார்கள்.

தமிழ்க் கட்சிகள் இந்த அளவுக்குக் காசைக்கொட்டிப் பரப்புரை செய்வதாகத் தெரியவில்லை.பெரிய கூட்டங்களை நடத்துவதற்குச் சத்தியற்றவைகளாக தமிழ்க் கட்சிகள் காணப்படுகின்றன.

குறுகிய கால இடைவெளிகளுக்குள் வந்த.வருகின்ற மூன்று தேர்தல்களிலும் தமிழ்க் கட்சிகளிடம் பெரும் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நிதி இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து நிதி பெயராவிட்டால் பெரிய கூட்டங்களை ஒழுங்குபடுத்தமுடியாது என்றும் கூறப்படுகிறது. இது தமிழரசியலின் அடிப்படைப் பலவீனம் ஒன்றைக் காட்டுகின்றது.

எந்தவோர் அரசியல் நடவடிக்கைக்கும் நிதித் திட்டமிடல் வேண்டும். நிதியை எப்படிச் சேகரிப்பது? எவ்வளவு காலத்துக்குள் சேகரிப்பது? போன்றவை தொடர்பாக பொருத்தமான தரிசனங்கள் இருக்கவேண்டும்.போதிய நிதி இருந்தால்தான் கட்சி நடத்தலாம்;அரசியல் செய்யலாம்.முழு நேரச் செயற்பாட்டாளர்களுக்கு சம்பளம் வழங்கவேண்டும்.பகுதி நேரச் செயற்பாட்டாளர்களை வைத்துக்கொண்டு அரசியல் செய்யமுடியாது. அதுவும் இன அழிப்புக்கு எதிரான அரசியலைச் செய்யமுடியாது.பச்சைத் தண்ணீரில் பலகாரம் சுடமுடியாது.காற்றைக் குடித்துக்கொண்டு தேசத்தைக் கட்டியெழுப்பமுடியாது.

தமிழ்க் கட்சிகளிடம் நிதிப்பற்றாக்குறை இருப்பதாகத் தெரிகிறது. புலம்பெயர்ந்த தமிழ் கோர்ப்பரேட்கள் சிலர் கடந்த இரண்டு தேர்தல்களிலும் உதவியதாகக் கூறப்படுகிறது.ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் பெருங்கூட்டங்களை நடத்தக்கூடிய அளவு நிதி பெயரவில்லை என்று தெரிகிறது.ஒப்பீட்டு ரீதியாக தமிழ்க் கட்சிகளின் நிதி ரீதியான பலவீனங்களை பரப்புரைக் களம் உணர்த்துகின்றது. அதேசமயம் ஆளுங்கட்சியான என்.பி.பி. அரச பலத்தோடும் வளத்தோடும் அதிகளவு நிதியைக் கொட்டி ஒரு பரப்புரைப் போரை நடத்துகின்றது.அரச பிரதானிகள் அந்தப் பரப்புரை மேடைகளில் தோன்றுகிறார்கள். குறிப்பாக அநுர கலந்துகொள்ளும் கூட்டங்களில் அவரோடு கைகளைக் குலுக்கிக் கொள்வதற்காக தமிழ் ஆண்களும் பெண்களும் முண்டியடிக்கிறார்கள். சில சமயங்களில் குழந்தைகளும் அநுரவோடு செல்பி எடுப்பதற்கு அழுகிறார்கள்.

இது கைபேசிகளின் காலம். மனிதர்களிடம் இயல்பாக உள்ள தன்மோகமானது செல்பி யுகத்தில் ஒரு நோயாக மாறி வருகிறது. அறிவிற்கும் மந்தமானதுக்கும் இடையிலான இடைவெளியானது யூரியூப்பர்களின் காலத்தில் மேலும் ஆழமானதாகி வருகிறது. பிரபல்யமானவரோடு படம் எடுப்பது; கைகுலுக்குவது;செல்பி எடுப்பது; பின்னர் அதனை சமூக வலைத்தளங்களில் பரப்பி பெருமைப்பட்டுக் கொள்வது என்பன இடம்பெறுகின்றன.

என்.பி.பி. எந்தளவுக்கு டிஜிட்டல் ப்ரோமோஷனில் கவனமாக இருக்கிறது என்பதற்கு அண்மையில் நடந்த மேதினக் கூட்டத்தில்,அநுர பேசும்போது,"லங்கா தீப" ஊடகவியலாளர் லஹிரு ஹர்ஷண எடுத்த ஒளிப்படம் தொடர்பான சர்ச்சை ஒரு சான்று.அந்த ஒளிப்படம் அநுரவை மக்கள் மத்தியில் நம்பிக்கையூட்டும் ஒரு தலைவராக முன்நிறுத்தவில்லை.மாறாக எதையோ கண்டு மிரண்டு,நம்பிக்கையிழந்து, கையறு நிலையில் தன்னைக் காப்பாறுமாறு பிரார்த்திக்கின்ற ஒருவராகத்தான் அந்தப் படம் அவரை முன்னிறுத்துகிறது.அந்தப் படத்தை வெளியில் வரவிடாமல் என்.பி.பி.க்காரர்கள் தடுத்திருக்கிறார்கள். அதாவது அநுரவின் எந்தப் படம் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் என்.பி.பி. கவனமாக இருக்கிறது.

தமிழ்ப் பகுதிகளிலும் அப்படித்தான்.வல்வெட்டித்துறையில் அநுரவை அணைக்கும் மூதாட்டி; கிட்டு பூங்காவில், வவுனியாவில் அநுரவை நோக்கிக் கைகுலுக்க அந்தரப்படும் ஆண்கள்,பெண்கள் போன்ற படங்களும், காணொலிகளும்; அநுரவை ஒரு கதாநாயகராகக் கட்டியெழுப்பும் நோக்கமுடையவை. அநுர எளிதாக அணுகப்படக்கூடிய, தொட்டுப் பழகக்கூடிய, எளிமையான ஒருவராகக் காணப்படுகிறார்.எனவே அவரோடு கை குலுக்கிப் படம் எடுப்பதற்கு ஒரு பகுதி தமிழர்கள் ஆர்வமாகக் காணப்படுகிறார்கள்.

பாவம் தமிழ் அரசியல்வாதிகள். அவர்களோடு கைகுலுக்கவோ அல்லது செல்பி எடுக்கவோ ஆட்கள் இல்லை. அப்படி எடுத்துக் கொண்டாலும் அதை டிஜிட்டல் ப்ரோமோஷன் செய்வதற்கு அவர்களிடம் காசு இல்லை.

எனினும் ஒரு விடயத்தில் தமிழ்க் கட்சிகள் ஒரே கூட்டில் நிற்கின்றன. என்.பி.பி.யை, அல்லது ஜே.வி.பி.யை அம்பலப்படுத்துவது, எதிர்த்துப் பிரசாரம் செய்வது என்ற ஒரு விடயத்தில் மட்டும் நான்கு தமிழ்த்தேசியத் தரப்புகளும் ஒரே கோட்டில் நிற்கின்றன. ஏனைய பெரும்பாலான விடயங்களில் தங்களுக்கு இடையே முட்டிமோதுகின்றன.அங்கே போட்டித் தவிர்ப்பிற்கான புரிந்துணர்வு இல்லை. "நாங்கள்தான் பெரிய கட்சி, மற்றவை உதிரிக் கட்சிகள்" என்று கூறும் சுமந்திரன் "நாங்கள் ஏனைய கட்சிகளை விமர்சிப்ப தில்லை என்று முடிவெடுத்திருக்கிறோம்"என்று கூறுகிறார். ஆனால் நடைமுறையில் உள்ளூரில் ஏனைய கட்சிகளுக்கு எதிராகத்தான் பரப்புரை நடக்கின்றது.

ஏன் அதிகம் போவான்? தமிழரசுக் கட்சிக்குள்ளேயே கிளிநொச்சி மாவட்டத்தில் கட்சிக்குக் கிடைக்கும் வெற்றி மறைமுகமாக சுமந்திரனையும் பலப்படுத்தி விடுவோமா என்ற பயம் பல வேட்பாளர்களிடம் உண்டு.அண்மையில் ஒரு பெண் வேட்பாளர் அவ்வாறு கேட்டதாக சிறீதரன் ஒரு பரப்புரைக் கூட்டத்தில் வைத்துக் கூறியுள்ளார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சுமந்திரனின் "எக்கிய ராஜ்ய"வை வைத்து அவரைத் தாக்குகிறது. தங்களுடையது மட்டும்தான் கொள்கைக் கூட்டு என்று கூறுகின்றது. யாழ். மாநகர சபைக்கான தேர்தல் களத்தில் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட காரணத்தால் மணிவண்ணன் போட்டிக்களத்திலிருந்து அகற்றப்பட்டிருக்கிறார்.

ஒரு பிரதான போட்டியாளர் அவ்வாறு அகற்றப்பட்டிருப்பது ஏனைய கட்சிகளுக்கு அதிகம் வாய்ப்பானது. அங்கே அரசாங்கத்தின் வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள யாழ். பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையாளர் குழந்தைத்தனமான முகத்தோடு காணப்படுகிறார்.நகரத் திட்டமிடல் தொடர்பில் தனக்குள்ள பாண்டித்தியத்தை நிரூபிக்கும் அறிக்கைகளை விடுகிறார். மணிவண்ணன் இல்லாத போட்டிக்களம் தனக்குச் சாதகமானது என்று நம்பி என்.பி.பி. உழைகின்றது. அர்ச்சுனாவுக்கும் மூன்று என்.பி.பி.க்காரர்களுக்கும் வாக்களித்த மக்கள் இனி யாருக்கெல்லாம் வாக்களிக்கப் போகிறார்களோ?

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்.பி.பி.க்கும் அர்ச்சுனாவுக்கும் கிடைத்த எதிர்பாராத வெற்றி என்பது தமிழ் ஐக்கியமின்மையினதும் தமிழ்த் தேசிய இயலாமைகளினதும் விளைவு. அந்த ஐக்கியமின்மை இப்பொழுதும் உண்டு.தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் உருவாக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியப் பேரவையானது ஒரு புதிய ஐக்கிய முயற்சி.ஆனால் அது தமிழரசுக் கட்சியைப் பிரதியீடு செய்யும் வளர்ச்சியை இன்னும் பெறவில்லை.

இப்பொழுதும் தமிழரசுக் கட்சிக்குத்தான் தாயக அளவில், ஒப்பீட்டளவில் அதிக வெற்றி வாய்ப்புகள் தெரிகின்றன.முன்னணி முன்னரை விட முன்னேறி வருகிறது. இப்படிப்பட்ட பலமுனைப் போட்டிக்குள் நான்கு தமிழ்த் தேசியத் தரப்புகளில் யார் வென்றாலும் அது தேசிய மக்கள் சக்திக்குத் தோல்விதான்.

அதேசமயம் எந்த ஒரு தமிழ்த் தேசியத் தரப்பு தோற்றாலும் அந்த வாக்குகள் ஏனைய மூன்று தமிழ்த்தேசியத் தரப்புகளுக்கு போகுமாக இருந்தால் அதுவும் பாதுகாப்பானதே. அப்பொழுது மீன் கரைந்தாலும் சட்டிக்குள் இருக்கும்.

மாறாக தமிழ்த் தேசியப் தரப்பிலிருந்து என்.பி.பி.க்குத் திரும்பும் வாக்கு ஒவ்வொன்றும் சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழும் வாக்குத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது பொருளாதாரம், அபிவிருத்தி

# எமக்கென்றொரு நிதிமூலம்!

○ கணபதி சர்வானந்தா

எமது பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டும் எனப் பலர் பேசி வந்திருக்கிறார்கள். தற்பொழுதும் பேசி வருகிறார்கள். இருந்தும் தற்காலத்தே அவ்வாறான முயற்சிகள் பற்றி அதிகம் பேசப்படுவதைப் பார்க்கிறோம். வடக்கின் ஆளுநராக நா.வேதநாயகன் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்கள் பலர் அவரைத் தொடர்புகொண்டு அது தொடர்பாகத் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி இருப்பதாகத் தெரியவருகிறது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, பனை அபிவிருத்திச் சபை போன்ற நிறுவனங்களும் தமது நடவடிக்கைகள் பற்றிப் பேசும்போது புலம்பெயர் தேசத்து முதலீட்டாளர்கள் பற்றியும் பேசி இருக்கின்றன.

எமது பொருளாதாரத்தை மேம்படுத்த முதலீடுகள் அவசியமாகின்றன. அவ்வாறான பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனத் திரட்சி என்ற விடயம் பெரும்பங்காற்றுகிறது. அவ்வாறான மூலதனத் திரட்சியில் வங்கிகளுக்கு முக்கியமான பங்குண்டு. அவ்வகை வங்கிச் செயற்பாடுகளை இரு வகைப்படுத்தலாம். ஒன்று வணிக நடவடிக்கை, இரண்டாவது அபிவிருத்தி நடவடிக்கை. பொது மக்களின் சேமிப்பை வைப்புகளாகத் திரட்டி அவற்றை உற்பத்தி நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதை வங்கிகள் வழமையாகக் கொண்டிருக்கின்றன. எனவே வங்கிகள் சேமிப்பை ஊக்குவிப்பதற்குக் கவர்ச்சிகரமான திட்டங்களை முன்வைப்பதைக் காணலாம். இருந்தும் இங்குள்ள வர்த்தக வங்கிகளால் அவ்வாறான திட்டங்களை முன்வைக்கவோ வெற்றிகரமாக முன்னெடுக்கவோ முடியாததொரு நிலைமை காணப்படுகிறது. அதற்குக் காரணம் சேமிப்பு மற்றும் நிரந்தர வைப்புகளுக்கு அவர்கள் கொடுக்கும் குறைவான வட்டி வீதத்தைச் சொல்லலாம். சேமிப்பை ஊக்குவித்து கடன்களை கொடுத்து அதனூடாக அபிவிருத்தியினைச் மேற்கொள்வதற்குப் பதிலாக வங்கிகள் அடைவு நடவடிக்கைகளையே அதிகம் ஊக்குவிக்கின்றன.

தங்க நகைகளுக்கு எதிராகப் பெறப்படும் கடன்கள் பெரும்பாலும் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை என்றே அறியக்கிடக்கிறது. தமது அன்றாடச் செலவினங்களைச் சமாளிப்பதற்கும் ஆடம்பரச் செலவுகளை மேற்கொள்வதற்குமே இத் தங்கக்கடனை அவர்கள் அதிகம் பயன்படுத்துகின்றனர். தங்கத்தைப் பொறுப்பாகக் கொடுத்துக் கடன் எடுக்க முடியாதவர்கள் பெரும் வட்டிவீதத்துடனான நுண் கடன்களில் ஆர்வங்காட்டி வருகின்றனர். குறைந்த கால அவகாசத்தில் கடனை மீளச் செலுத்தவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் கொடுக்கப்படும் அவ்வகைக் கடன்களுக்குப் பெரும் வட்டிவீதத்தை மக்கள் செலுத்துவதற்குக் காரணம் அதனைப் பெறுவதில் உள்ள இலகுவான வழிமுறைகளே. பல சந்தர்ப்பங்களில் கடன்களுக்குப் பொறுப்பாக கடன்பெறுபவர் அல்லாத வேறு வாடிக்கையாளர்களிடமிருந்து பொறுப்பை அல்லது திகதியிடப்படாத காசோலைகளை நிதிநிறுவனங்கள் பெற்றுக்கொள்கின்றன. அத்துடன் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் நிரந்தர வருமானம் உள்ளவர்கள் பொறுப்புக்காகக் கையொப்பமிட அனுமதிக்கப்படுகின்றனர்.

எனவே வங்கிகளால் கொடுக்கப்படுகின்ற கடன் திட்டங்களில் கடன்பெறுபவர்கள் பெரும்பாலும் அபிவிருத்திக்கான எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என்பது வெளிப்படை. எனவே அபிவிருத்தியை மேற்கொள்ள, அதனை ஊக்குவிக்க, அது தொடர்பான செயற்பாடுகளை அதிகரிக்க அபிவிருத்தி வங்கி ஒன்று எமக்குத் தேவைப்படுவதை நிகழ்காலச் சமூகம் உணர்வதாகத் தெரிகிறது. அது ஒரு சுயமாக இயங்கும் நிறுவனமாக இருக்கவேண்டும் என்றும் அது திரட்டப்பட்ட மக்கள் நிதிப் பங்களிப்புடன் சேவையாற்றவேண்டும் என்றும் அவர்கள் அதற்கான முதலீடுகளை இன்னுமொரு நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெற்றுக் கொள்ளாதவர்களாகவும் இருக்கவேண்டும்

**பிறரிடம்கையேந்தும் போதுதானே அவர்களின் சட்ட திட்டங்களுக்கும் அபிலாசைகளுக்கும் அவர்கள் நோக்கங்களுக்கும் அரசியலுக்கும் நாம் அடிபணிய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. நாமே நமக்குரிய வழிகளைத் தேடுவதும் அதனை உருவாக்குவதும் அதன்வழி அபிவிருத்தியை மேற்கொள்வதுவும் ஒரு சிறப்பான எதிர்காலத்தை நோக்கி நகர வழிவகுக்கும்.**

என்ற அடிப்படையிலே அமையப்பெறவேண்டும் என்பதுவும் அவர்கள் சிந்தனையாக இருக்கக் கண்டேன். எனவே வடக்குக்கானதொரு அபிவிருத்தி வங்கி பற்றிப் பல தடவைகள் பேசப்பட்டிருக்கிறது. அதற்கான பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய வங்கியின் ஆளுநராக கபிரியல் இருந்தபோது வடக்கு அபிவிருத்தியில் அக்கறை கொண்ட துறைசார் பெண் ஒருவர் இது பற்றி அவருடன் பேசியதாகவும் அதற்கு அவர் எந்தவித சாதகமான பதிலையும் கொடுக்காது பேச்சை முடிவுறுத்திக் கொண்டார் என்றும் சொல்லப்படுகிறது.

பின்பு வட மாகாண முதலமைச்சராக விக்கினேஸ்வரன் பதவியில் இருந்தபோது இது பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போதிருந்த அரசின் இனவாதக் கொள்கைகளே அதற்கு முட்டுக்கட்டையாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இருந்தும் நிபுணர்கள் பலரைக் கொண்டுள்ள எமது சமூகத்தில் அதனை வேறு வழிகளில் சிந்திக்கவோ, மாற்றுவழிகளைத் திட்டமிடவோ முடியாதுபோனது ஏன்? என்ற கேள்வியும் உண்டு. ஆகக்குறைந்தது ஒரு முதலமைச்சர் நிதியத்தை ஏற்படுத்தி அதன் மூலம் புலம்பெயர் தேசத்து மக்களின் நிதி மூலங்களைக் கொண்டு வந்து மிகப்பெரிய முதலீடுகளைச் சட்டரீதியாகச் செய்திருக்க முடியும் என்பது பலரது வாதம். அவ்வாறு செய்யமுடியாது போனதுக்குரிய காரணம் என்ன என்பதுவும் எமது சமூகத்தின் கேள்வியாக இருக்கக் கண்டேன். அதேசமயம், ஏற்கனவே இலங்கையில் திறக்கப்பட்ட அபிவிருத்தி வங்கிகளும் சர்வதேச நாணயநிதியத்தின் ஆலோசனைக்கிணங்க வர்த்தக வங்கிகளாகத் தமது செயற்பாடுகளை மாற்றிக்கொண்டுவிட்டதாகவும் அறிகிறோம். அதற்கு பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் அதற்குப் பின்னாலுள்ள ஓர் அரசியலே அதற்கு முக்கியமான காரணமெனச் சொல்லப்படுகிறது. இதன் நடுவே முதலீடுகளைச் செய்ய விரும்பும் புலம்பெயர் தேசத்தவர்களின் எண்ணத்துக்குத் தடையாக சில விடயங்களைத் தெளிவுபடுத்தவேண்டிய கடப்பாடும் எமக்குண்டு. தமது முதலீட்டுக்குரிய உத்தரவாதத்தைச் சட்டத்தினூடாக அவர்கள் கோருகின்றனர். அதேவேளை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அரசாட்சி மாறுவதால் இது தொடர்பில் ஒரு திட்டவட்டமான நிரந்தரக் கொள்கைகளை நிதிச் சட்டம் வரையறுக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அவர்களிடமுண்டு.

தற்போது பதவிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தாம் நாட்டை முன்னேற்ற அதற்கான அபிவிருத்திகளை மேற்கொள்ளத் தயங்காமல் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகச் சொல்லி இருக்கின்றது. ஜனாதிபதியும், பிரதமரும் இவ்வாறான கருத்துப்படத் தமது உரைகளை ஆற்றியிருக்கின்றனர். அவர்கள் தமது சொற்படி காரியமாற்றுவார்கள் என நம்புவோம். எனவே எமது சமூகத்தில் உள்ளவர்கள் முதலீட்டுத் துறையில் புலமையாளர்கள், நிதிச் செயற்பாட்டில் விற்பன்னர்கள், அபிவிருத்தியில் ஆர்வமுள்ளவர்கள் என ஒரு கூட்டை உருவாக்கி அவர்கள் எமக்கான ஒரு வங்கி பற்றிச் சிந்திக்கலாம். அது அபிவிருத்தி வங்கியாக இருக்கவேண்டும் என்பது பலரது பேரவா. அப்பிடி ஒன்று அமையுமாயின் சர்வதேச உதவிகளையோ அல்லது உலக வங்கி போன்ற நிறுவனங்களையோ எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிறார் எமது உள்ளூர் அபிவிருத்தியில் ஆர்வமுள்ள ஒரு செயற்பாட்டாளர். உலகளாவிய ரீதியில் புலம்பெயர்ந்து வாழும் எமது சமூகத்தின் வைப்புகளைச் சேமித்தாலே பெரும் முதலீடுகளைக் கொண்டு வரலாம். அபிவிருத்திக்காக அவர்கள் அப்படியான முதலீடுகளைச் செய்ய விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். கோயில் கட்டுமானங்களில் கோடிக்கணக்கான பணத்தை கொட்டிச் செலவு செய்கின்றவர்களை அபிவிருத்தி என்ற விடயத்தை நோக்கித் திசைதிருப்புவது கடினகாரியமில்லை.

ஒரு குடும்பத்துக்கு ஆயிரம் அமெரிக்க டொலர் என்று பார்த்தாலே ஒரு பெரும் நிதிச் சேகரிப்பை நாம் மேற்கொள்ளலாம். அதுவும் புலம்பெயர் தேசத்தில் எமது தொடர்பைத்தக்கவைத்துக்கொண்டிருக்கும் எமது சமூக உறவுகள் இருக்கும்வரை மட்டுமே இது சாத்தியமாகும். அடுத்த தலைமுறை இது பற்றிச் சிந்திக்குமா என்பது கேள்விக்குரிய விடயம். முதலில் எமக்குத் தேவைப்படுவது இது பற்றிச் சரியான வழியில் சிந்தித்து அதற்குரிய வழிமுறைகளைக் கையாண்டு மத்திய வங்கியின் ஆலோசனைக்கமைவாக ஒரு திட்டத்தை வடிவமைக்கக்கூடிய ஒரு குழுவினரே. எமது நோக்கத்துக்குத் தடையாக அவர்களின் ஆலோசனைகள் இருக்குமாயின் அதனை வெல்ல வழிவகைகளைத் தேடக்கூடியவர்களாகவும் அந்தக் குழுவினர் இருக்க வேண்டும் என்பதுவும் முக்கியம். அத்தகைய வல்லுநர்கள் எம் மத்தியில் இருக்கிறார்கள். அவர்கள் அதற்கு உதவுவார்கள் என்பது எனது நம்பிக்கை. அதேசமயம் சர்வதேச நிறுவனங்களின் சட்டதிட்டங்கள், ஆலோசனைகள் என்பனவற்றுக்கு அமைவாகவும் நாம் சிந்திக்கவேண்டும். எமது அபிவிருத்திக்கான திட்டங்களை (Tailor Made) நாமே வடிவமைப்பதற்கேதுவாக எமது நிதி மூலங்களை உருவாக்கவேண்டும். பிறரிடம் கையேந்தும் போதுதானே அவர்கள் சட்டதிட்டங்களுக்கும் அவர்கள் அபிலாஷைகளுக்கும் அவர்கள் நோக்கங்களுக்கும் அவர்கள் அரசியலுக்கும் நாம் அடிபணியவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. நாமே நமக்குரிய வழிகளைத் தேடுவதும் அதனை உருவாக்குவதும் அதன்வழி அபிவிருத்தியை மேற்கொள்வதுவும் ஒரு சிறப்பான எதிர்காலத்தை நோக்கி நகர வழிவகுக்கும். எம் மத்தியில் எமக்கானதொரு வங்கி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அது சார்ந்த ஓர் உரையாடலைத் திறந்துவிடுவதே எமது எண்ணம். எனவே எமது சமூகத்தின்பால் கரிசனை உள்ளவர்கள் இது பற்றிச் சிந்திக்கவேண்டும். நாமே நமக்கு என்ற வகையில், சிந்திப்போமா? இதனை முயற்சிப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசியப் பின்னடைவால் பறிபோகும் வடக்கு பிரதேசசபை?



பா.குமுதன்

இடம்பெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பல வேறு வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்தவகையில் ஏழுவருடங்களுக்குப் பின்னர் நடைபெறவுள்ள இந்தத்தேர்தலில் நாடு முழுவதிலும் உள்ள 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தைநெருங்கியுள்ளன. இன்னும் இரு தினங்களில் எல்லாமே முடிந்து. முடிவுகளும் தெரிந்துவிடும். 2024ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டின்பிரகாரம் நாடுமுழுதும் ஒருகோடியே 72இலட்சத்து 96 ஆயிரத்து 330 பேர் இந்தத்தேர்தலில் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர். இதுவரை சோபையிழந்து காணப்பட்ட தேர்தல்களம் வாக்களிக்கும் நாள் நெருங்கியநிலையில் ஏட்டிக்குப்போட்டியான பரப்புரைகளால் சூடுபிடித்துள்ளது.

### வவுனியாவில் 1231 பேர் போட்டி

நாடாளுமன்றத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித்தேர்தலின்போது வன்னிதேர்தல் மாவட்டமாக ஒருங்கிணைக்கப்படும் வவுனியா மாவட்டம் உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் தனிநிர்வாகமாவட்டமாகவே கொள்ளப்பட்டு தேர்தல் நடத்தப்படுகின்றது. வவுனியா மாநகரசபை,வவுனியா தெற்கு தமிழ்ப்பிரதேசசபை,வவுனியா வடக்குப் பிரதேசசபை, வெங்கலசெட்டிகுளம் பிரதேசசபை, தெற்குசிங்கள பிரதேசசபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி அலகுகளை வவுனியா மாவட்டம் கொண்டுள்ளது. இதுவரை காலமும் நகரசபையாக செயற்பட்டுவந்த வவுனியாநகரசபை இம்முறை தரமுயர்த்தப்பட்டு மாநகரசபையாக மாற்றப்பட்ட பின்னர் இடம் பெறும் முதலாவது தேர்தலாக இது அமைந்துள்ளது. இந்தச் சபை, மாநகரசபையாக தரமுயர்த்தப்பட்டிருந்தாலும் எல்லை நிர்ணயம் புதுப்பிக்கப்படாமல் ஏற்கனவே பிரிக்கப்பட்ட அடிப்படையிலேயே இந்தத்தேர்தல் இடம்பெறவுள்ளது. வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிசபைகளுக்கும் மொத்தமாக 103 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 1,231 வேட்பாளர்கள் தமது வேட்புமனுவினை தாக்கல்செய்திருந்தனர். வவுனியா மாவட்டத்தில் இம்முறை 129, 293பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனரென தேர்தல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பறிபோகும் வடக்குபிரதேசசபை

வடக்குமாகாணத்தில் இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கும் அரசின் செயற்பாடுகளில் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியாக வவுனியா வடக்கு உள்ளது. குறிப்பாக போரால் ஏற்பட்ட பூர்விகத் தமிழ்மக்களின் இடப்பெயர்வு மற்றும் வடமத்தியமாகாணத்தின் எல்லையினை அது பகிர்ந்துகொள்வதால் குடியேற்றச்செயற்பாடுகளை மேற்கொள்ளும் அதிகாரத்தரப்புக்கு அது இலகுவானதாக உள்ளது. யாமாநகரசபை,தமிழ்ப்பிரதேசசபை,செட்டிகுளம் பிரதேசசபைகளில் ஏதாவது ஒரு கட்சியைச்சேர்ந்த தமிழ்ப்பிரதிநிதிகள் ஆட்சியமைக்கும் சூழல்இருந்துவருகின்றது. ஆனால் வவுனியா வடக்கு பிரதேசசபையின் இன்றையநிலை சற்றுமாறுபட்டது. அதன் ஆட்சியதிகாரம் இம்முறை தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு கிடைக்குமா என்பதும் அங்கு தமிழர் ஒருவர் தவிசாளராக வருவாரா என்பதும் இன்று கேள்விக்குறியே.

## 4, 500சிங்கள வாக்காளர்கள்

வவுனியா வடக்கு பிரதேசசபையில் 15, 088 பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். அவர்களில் அண்ணளவாக 4, 500 பேர் சிங்களவாக்காளர்கள். சபைக்கு மொத்தமாக 26உறுப்பினர்கள் தேர்தெடுக்கப்படவேண்டும். இந்தச் சபை 14தேர்தல் வட்டாரங்களைக்கொண்டுள்ளது. அவற்றில் நான்கு வட்டாரங்கள் முற்றுமுழுதாக சிங்களக் கிராமங்களையே கொண்டுள்ளன.

| வட்டாரம் | வாக்காளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கயபாபுர-மொனரவெவ | 681 |
| கல்யாணபுர | 567 |
| அத்தாவெட்டுனுவெவ | 1124 |
| சம்பத்நுவர | 1504 |
| ஊஞ்சல்கட்டி மருதோடை | 1042 |

*சிங்கள வாக்காளர்களைக் கொண்ட வட்டாரங்கள்*

மேலேகாட்டப்பட்டுள்ள தகவல்கள் சிங்கள வட்டாரங்களில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றன. அவற்றில் ஊஞ்சல்கட்டி மருதோடை வட்டாரம் குறைந்தளவான தமிழ்வாக்காளர்களைக் கொண்டுள்ள ஒரு வட்டாரமாகும். ஆனால் இந்தக் கிராமம் தமிழ்மக்களின் பூர்விக இடமாக ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இப்போது அதனுடன், அதிகா வான வாக்குகளைக் கொண்ட சிங்களக் கிராமங்களான போகஸ்வெவ,கம்பிளிவெவ ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. இறுதியாகச் செய்யப்பட்ட எல்லைநிர்ணயத்தின் அடிப்படையில் அது பிரிக்கப்பட்டிருந்தது. இதேவேளை ஊஞ்சல்கட்டி தவிர்ந்த ஏனைய நான்குசிங்கள வட்டாரங்களும் வடமத்தியமாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு(வெலிஓயா என்று பெயர்மாற்றறப்பட்டுள்ளது.) பிரதேச செயலாளர் பிரிவின் நிர்வாகத்தில்இணைக்கப்பட்டவையாகும். தேர்தல்களுக்காக வவுனியா தேர்தல்காரியாலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதுஒரு நிர்வாகரீதியான குழப்பநிலையினையும் ஏற்படுத்தியுள்ளது.

| கிராமம் | வாக்காளர்கள் |
|---|---|
| ஊஞ்சல்கட்டி-மருதோடை | 315 |
| போகஸ்வெவ | 772 |
| கம்பிளிவெவ | 155 |

மேல் உள்ள தரவுகளின் அடிப்படையில் மருதோடை வட்டாரத்தில் தமிழ்வாக்காளர்கள் வெறும்315 பேர் மாத்திரமே உள்ளநிலையில் சிங்களவாக்காளர்கள் 947 பேர் உள்ளனர். கடந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் 510 வாக்குகளை பெற்று சிங்களவேட்பாளர் ஒருவரே இந்தவட்டாரத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

### திருவுளச்சீட்டால் ஆட்சியைப் பிடித்த கூட்டமைப்பு

கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வவுனியா வடக்குப் பிரதேசசபையின் ஆட்சியை கடும் போராட்டத்திற்கு மத்தியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது. திருவுளச்சீட்டு மூலமே அதன் தவிசாளர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். ஆனால் அந்தப்போட்டி இரு தமிழ்த்தேசிய கட்சிகளுக்கிடையிலானதாகவே இருந்தது. ஆனால் இம்முறை அந்த நிலைமை மாறக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகம் தென்படுகின்றன.

| கட்சிகள் | பேற்றவாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக்கட்சி | 2794 | 08 |
| அ.இ.தமிழ்காங்கிரஸ் | 1254 | 03 |
| தமிழர்விடுதலைக்கூட்டணி | 1124 | 03 |
| இலங்கை பொதுஜன பெரமுன | 1870 | 05 |
| ஐக்கியதேசியகட்சி | 1370 | 03 |
| சுததிரக்கட்சி | 973 | 02 |
| ஐக்கியதேசிய சுதந்திரமுண்ணணி | 246 | 01 |
| மக்கள் விடுதலைமுண்ணணி | 303 | 01 |

*2018 உள்ளூராட்சித் தேர்தல்*

## 10 அதிகரித்த சிங்கள உறுப்பினர்கள்

கடந்தமுறை இடம்பெற்ற தேர்தலில் வடக்குப் பிரதேசசபையில் 10 சிங்கள உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். நேரடியாக 5பேரும் பட்டியல்முறையில் 5பேரும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அந்தத் தேர்தல்முறையால் வெறும் 246 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியும் ஒரு ஆசனத்தைப் பெற்றது. பிரதேசசபைக்கான தவிசாளராக தமிழ்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் ச.தணிகாசலமும், தமிழர்விடுதலைக் கூட்டணியின் ஜெ.ஜெயரூபன் ஆகிய இருவரும் முன்மொழியப்பட்டனர். நா.தணிகாசலம் 11வாக்குகளைப் பெற்றார். அவருக்கு அவரது கட்சியைச்சேர்ந்த 8உறுப்பினர்களும் ஐக்கியதேசியக்கட்சியின் 2 உறுப்பினர்களும் ஐக்கியதேசிய முன்னணியின் ஒரு உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர். கூட்டணியின் ஜெ.ஜெயரூபனும் 11வாக்குகளைப் பெற்றார் . அவருக்கு அவரது கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும் பொதுஜனபெரமுனவின் 5 உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும் ,ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினரும் வாக்களித்தனர். இருவரும் சமமான வாக்குகளைப் பெற்றமையால் உள்ளூராட்சிச் சட்டத்தின்பிரகாரம் திருவுளச்சீட்டு மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ச.தணிகாசலம் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். தவிசாளர் தெரிவின்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 3உறுப்பினர்கள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு உறுப்பினரும் நடுநிலைமை வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சிங்கள உப தவிசாளர்

உபதவிசாளருக்கான தெரிவில் மூவர்போட்டியிட்டிருந்தனர் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் து.தமிழ்ச்செல்வன், பொதுஜனபெரமுனவின் சார்பில் காமினி விக்கிரமபால, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் ந.யோகராஜாவும் போட்டியிட இருந்த நிலையில், து.தமிழ்ச்செல்வன் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் 14 வாக்குகளைப் பெற்றார். அவருக்கு கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் ஒரு உறுப்பினரும் வாக்களித்தனர். கா.விக்கிரமபால 6 வாக்குகளை மாத்திரம் பெற்றார். அவருக்கு பொதுஜனபெரமுனவின் 5 வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் 1 வாக்கும் கிடைத்தன . உப தவிசாளர் தெரிவின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் 3 உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு உறுப்பினரும் நடுநிலைமை வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மக்கள் விடுதலை முன்னணி

மேற்குறித்த இரு சந்தர்ப்பங்களிலும் தற்போதைய தேசியமக்கள் சக்தியான மக்கள் விடுதலை முன்னணி நடுநிலைமை வகித்திருந்தது. இருப்பினும் ஒரு ஆசனத்தை பெற்றிருந்த மக்கள் விடுதலை முன்னணியின் கொழும்புத்தலைவர்களிடம் தமக்கு ஆதரவு வழங்குமாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர்கள் அந்தக்காலப்பகுதியில் பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்திருந்தனர். ஆனால் இன்று நிலைமைமுற்றாக மாறி அதே மக்கள் விடுதலை முன்னணி தேசியமக்கள் சக்தியாக மாறி குறித்த பிரதேசசபையின்ஆட்சியைக் கைப்பற்றும் நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளது. நடந்துமுடிந்த இருதேர்தல்களிலும் தேசியமக்கள் சக்திக்கு தமிழ்மக்கள் தமது ஆதரவை வழங்கியுள்ளனர். சிங்களப் பகுதிகளிலும் நிலைமை அவ்வாறே இருக்கிறது. எனவே வவுனியா வடக்குப்பிரதேசபையின் சிங்கள வாக்காளர்களைக் கொண்டுள்ள 5 வட்டாரங்களிலும் சிங்கள வேட்பாளர் ஒருவரே வெற்றிபெறுவார். கடந்ததேர்தலில் அந்தப்பகுதிமக்களின் பெரும்பான்மை வாக்குகள் தேசியமக்கள் சக்திக்கே கிடைக்கப்பெற்றிருந்தது. இம்முறை தமிழ்க்கிராமங்களின் வாக்குகளும் அந்தக்கட்சிக்கு கிடைக்கும்நிலை உள்ளதை மறுப்பதற்கில்லை. அப்படி நடக்கும் பட்சத்தில் தேசியமக்கள் சக்தி, குறித்த பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான நிலைஉருவாகும். அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினால் தமிழ் பேசும் ஒருவர் தவிசாளராக நியமிக்கப்படுவாரா என்பது சந்தேகமே. எனவே இந்தவிடயங்கள் தொடர்பில் தமிழ்வாக்காளர்கள் சிந்தித்து தமது வாக்குகளைஅளிக்கவேண்டும்.

### இனவிரோதப்போக்கைத் தொடரும் அரசு

போருக்குப்பின்னர் வவுனியாவடக்கின் எல்லைப் பகுதிகளில் திட்டமிட்டசிங்களக் குடியேற்றங்கள் ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டுவந்தன. மஹிந்தராஜபக்ச, மைத்திரிபால,கோத்தாபய என ஆட்சியாளர்களின் பெயர்கள்தான் மாறியதே தவிர அரசின் குடியேற்றக்கொள்கை மாறியிருக்கவில்லை. ஆனால் முதன்முறை ஆட்சிப்பொறுப்பைஏற்றுள்ள ஜனாதிபதி அநுரமீது தமிழ்மக்களின் ஒரு பிரிவினர் நம்பிக்கை கொண்டிருப்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் தொடர்ச்சியான சிங்கள பௌத்தஅரசியல் நிகழ்ச்சிநிரலை புறம்தள்ளி தெற்கின் கோபத்திற்குள் இந்தஅரசு சிக்கிக்கொள்ளும் நிலையையும் உருவாக்காது. இந்த ஆட்சியாளர்களின் காலப்பகுதியில்தான் தையிட்டி சட்டவிரோத விகாரையில் புதியகட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எனவே தேசிய மக்கள் சக்தியும் ஒரு பௌத்த சிங்கள இனவாதச் சிந்தனையின் அடிப்படையிலேயே ஆட்சியைத் தொடரப்போகின்றது என்பது வெளிப்படை. இந்த நிலையில் தமிழ்ப் பிரதிநித்துவங்களையும், உள்ளூராட்சி சபைகளையும் மாற்றம் என்ற மாயைக்குள் சிக்கி பறிகொடுக்காமல், எமது இருப்பைத் தக்கவைக்கும் ஆயுதமாக எமது வாக்குகளை இந்தத் தேர்தலில் பயன்படுத்தவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீலன் ராசதுரை

# காரைதீவு 1985:

## இலங்கையின் இனப்படுகொலையின் நிழலில் மறக்கப்பட்ட தமிழர் பேரழிவு

### ஏப்ரல் 12, 1985 .

காலைப்பொழுது அமைதியாக விடிந்தது.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் கரையோரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய தமிழ்க் கிராமமான காரைதீவை ஒளிக் கதிர்களுடன் பயங்கரமும் சூழ்ந்து கொண்டது. தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக கிராமவாசிகள் தயாராக இருந்தவேளை ஆயுதமேந்திய குழுவினர் கிராமத்துக்குள் நுழைந்தனர். இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளின் ஆதரவுடன் இயங்கி வந்த அந்தக்குழுவில் பெரும்பாலும் முஸ்லிம் ஆண்களே உள்ளடங்கியிருந்தனர். இரத்தத்தை உறைய வைக்கும் படுகொலைகளை அந்தக்குழு மேற்கொண்டது (Ismail, 1985; Hoole, 2014). கிட்டத்தட்ட 40 ஈழத்தமிழர்கள் மூன்று நாள்கள் நடத்தப்பட்ட வெறியாட்டத்தில் கொல்லப்பட்டனர். வாள் வெட்டுக்கள், துப்பாக்கிச்சூடு மற்றும் உயிருடன் எரித்தல் மூலமாக இக்கொலைகள் முன்னெ டுக்கப்பட்டன. 5,000க்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன, தமிழர்களின் கோயில்களின் புனிதத் தன்மைக்கு ஊறு விளைவிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். (UTHR அறிக்கை).

இந்தத் துயரம் நிகழ்ந்து 40 ஆண்டுகள் கடந்தும் தமிழர்களுக்கு நேர்ந்த இந்தப் பேரழிவு இன்னும் அதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாத நிலையே நிலவுகின்றது. அரசை மையமாகக்கொண்ட, யுத்தத்தைப் பற்றிய கதைகூறல்களிலும் இவ்விடயம் உள்வாங்கப்படவில்லை. ஆயினும், தமிழர்களைப் பொறுத்தவரை; காலணித்துவத்துக்கு பின்னரான வரலாற்றுப் பாதையைத் தீர்மானிக்கும் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு வழங்கப்படும் தண்டனை விலக்கின் இன்னொரு வலிமிகுந்த அடையாளமாகவே இது உள்ளது. குறித்த தினம் வரை, தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்களால் முன்னெடுக்கப்பட்ட மிகப்பெரிய வன்முறை நிகழ்வாக அது அமைந்தது. அடுத்து வந்த பல தசாப்தங்களுக்கு சமூகங்களுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட இந்த வன்முறையே வழிவகுத்தது. வன்முறைக்கு வன்முறையே தீர்வு என்ற உணர்வை இது சமூகங்கள் மத்தியில் ஏற்படுத்தியதுடன் அதனைத் தொடர்ந்த வாரங்கள், மாதங்கள் மற்றும் வருடங்களில் இடம் பெற்ற வன்முறைகளுக்கு கால்கோளாக அது மாறியது.

### காரைத்வு வன்முறைக்கான வழித்தடம்: தமிழர் விரோத வன்முறையின் வேர்கள்

காரைதீவு வன்முறை என்பது ஒரு தனியான வன்முறைச் சம்பவம் அல்ல. தமிழ்த் தேசியவாதப் போராட்டத்தின் மீது வடக்கு கிழக்கில் வாழும் பல முஸ்லிம்கள் காட்டிய அனுதாபம் இலங்கை அரசாங்கத்துக்கு பதற்றத்தை விளைவிக்கும் விடயமாகக் காணப்பட்டது. எனவே, இவ்விரண்டு சமூகங்கள் இடையே விரிசலைக் கொண்டு வரும் தேவை அரசாங்கத்துக்கு எழுந்தது. "கிழக்கு மாகாணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் வளர்ந்து வரும் ஒற்றுமை மற்றும் பாதுகாப்புப் படைகள் மீது தமிழ் மற்றும் முஸ்லிம் போராளிகளின் சமீபத்திய பல வெற்றிகரமான தாக்குதல்களின் பின்னணியில்" வன்முறை ஏற்பாடுசெய்யப்பட்டதாக தமிழ் ரைம்ஸ் (ஏப்ரல் 1985) அறிக்கையிட்டது. அந்தக்காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடன் உறவுகளை மீள உருவாக்கிய விடயம் முஸ்லிம்கள் மத்தியில் எதிர்ப்பு அலைகளை உருவாக்கியது. அதேவேளை, தமிழ் ஆயுதக் குழுக்கள் வெளிப்படையான ஸியோனிஸ எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தன. இந்த இரண்டு சமூகங்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் முன்னுரிமையான விடயமாக இருந்தது. குறிப்பாக கிழக்கில் இந்தத் தேவை மிகவும் அவசியமானதாக அமைந்திருந்தது.

வடக்கு - கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையான சகவாழ்வு வரலாற்று ரீதியானதாக அமைந்திருந்தது. இவ்விரு சமூகங்களும் பகிரப்பட ஒரு மொழியால் பிணைக்கப்பட்டிருந்தன. சிங்கள-பௌத்த பேரினவாதம் எழுச்சிபெற்ற வேளை, தமிழர்களைப் போன்று தனி நாட்டுக்காக போரிடாத முஸ்லிம்கள் நாடு முழுவதும் சிறுபான்மைப்படுத்தப்பட்ட வர்களாகக் காணப்பட்டனர், தமிழர்கள் தமது தாயகமாகக் கோரும் அதே நிலத்தை தமக்குரியது எனக்கோரும் சிங்களவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டுக்குள் முஸ்லிம்கள் அதிகரித்த அளவில் சிக்கிக்கொண்டனர். மறுபுறத்தில், தமிழர் போராட்டத்துக்கு கிடைத்த முஸ்லிம் ஆதரவை முயற்சியின்றிக் கிடைத்த வரப்பிரசாதமாக தமிழ்த் தலைமைகளும் பயன்படுத்திக் கொண்டன. சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கை அரசாங்கங்கள் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை ஒன்று திரட்டுவதை நோக்கமாகக் கொண்ட பேரினவாதக் கொள்கைகளைப் பின்பற்றி வந்தன. இதில் நிலக் குடியேற்றத் திட்டங்களும் உள்ளடங்கியிருந்தன, இது தமிழ்ப் பெரும்பான்மை பிரதேசங்களின் சனத்தொகைப் பிரிவுகளில் மாற்றங்கள் உருவாகக் காரணமாக அமைந்தது. அதேசமயம், தமிழர்கள் மற்றும் சிங்களவர்களுக்கு இடையே ஒரு சாத்தியமான அரசியல் இடைவலயமாக முஸ்லிம் சமூகத்தை இலங்கை அரசு அடையாளம் கண்டது. அரச ஆதரவைப்பெற்ற இந்த சமூகப் பிளவு உள்ளூர் சமூகங்கள் மத்தியில் பதற்றங்களை அதிகரித்ததுடன் அதிக வன்முறை வடிவத்தைப் பிரயோகிக்கவும் தொடங்கியது. காத்தான்குடி, ஏறாவூர், கல்முனை போன்ற பிரதேசங்களில் நிலம், சந்தைகள் மற்றும் உள்ளூர் அதிகாரம் தொடர்பான பதற்றங்கள் அதிகரிக்க ஆரம்பித்தன. சில முஸ்லிம் அரசியற் செயற்பாட்டாளர்கள் ஆளும் சிங்கள அரசியல் கட்சிகளுடன் கைகோர்த்து, தமிழ்ப் போராளிகளிடம் இருந்து "சுய பாதுகாப்பு" என்ற போர்வையில் துணை இராணுவக் குழுக்களை உருவாக்க அரசுக்கு உதவினர்.

> காரைதீவில் இடம்பெற்ற படுகொலை ஓர் அறியப்படாத அட்டூழியமாக மட்டுமல்லாமல், தமிழ் அரசியல் அதிகாரத்தை அழிப்பதற்காக இலங்கை அரசு எவ்வாறு பிரிவினையை ஆயுதமயமாக்கியது என்பதற்கான அப்பட்டமான அடையாளமாகவும் உள்ளது.

அரச வன்முறைக்கு எதிராக தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற போராளிக்குழுக்கள் செயற்பட ஆரம்பித்தவேளை, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான முஸ்லிம் இளைஞர்களும் தமிழர் போராட்டத்தில் இணைந்தனர். அதே சமயம் அரசு சத்தமின்றி முஸ்லிம் ஊர்காவல் படைகளுக்கு ஆயுதங்களை வழங்கியது. இந்த ஊர்காவல் படைக்கு இராணுவப் பயிற்சி, ஆயுதங்கள், மற்றும் அரசியற் பாதுகாப்பு என்பன பிரித்தானியா மற்றும் இஸ்ரேலால் பயிற்றுவிக்கப்பட்ட விசேட அதிரடிப் படையினரால் (STF) வழங்கப்பட்டன. அரசு தெளிவான மூலோபாயம் ஒன்றைக் கொண்டிருந்தது: நேரடி இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் அனுதாபம் வழங்கும். பொதுமக்களுக்கு எதிரான பழிவாங்கல் மற்றும் முஸ்லிம் சமூகம் வழங்கும் ஆதரவை இல்லாதொழித்தல் என்பவற்றில் தமிழர் போராட்டத்தை பலவீனப்படுத்துவதே அந்த மூலோபாயம்.

வடக்கு - கிழக்கில் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதில் அரசாங்கம் கொண்டிருந்த வகிபாகத்தை புரிந்துகொள்ளாமல் இந்த வன்முறைப் போக்கை விளங்கிக்கொள்ளமுடியாது. முஸ்லிம் ஊர்காவல் படைகளுக்கு ஆயுதம் வழங்கியமை போராட்டத்துக்கு எதிரான பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகக் காணப்பட்டது. இதன் நோக்கம் தமிழ்ப் போராளிகளை எதிர்ப்பது மாத்திரமல்லாமல் கிழக்கில் தமிழர்களின் அரசியற் பலத்தை சிதைப்பதுமாகவே இருந்தது. அரச வன்முறையால் பல முஸ்லிம்களும் பாதிக்கப்பட்ட அதேவேளை, சில தமிழ் மேட்டுக்குடிகள் மற்றும் ஆயுதக் குழுக்களைப் போன்று முஸ்லிம் மேட்டுக்குடிகள் மற்றும் ஆயுதமேந்திய செயற்பாட்டாளர்களும் தமிழர் எதிர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் தீவிர பங்கேற்பை வழங்கியிருந்தனர்.

### காரைத்வுப் படுகொலை

படுகொலைகள் இடம்பெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்களைத் தூண்டும் துண்டுப்பிரசுரங்களை இலங்கை விமானப்படையின் உலங்கு வானூர்திகள் மூலமாக பகிரப்பட்டன. தமிழ் டைம்ஸ் (மே 1985) ஊடகத்தின் தகவல்களின் படி, முஸ்லிம்கள் மீதான பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களிடம் இருந்து கப்பம் கோரல் போன்ற சம்பவங்கள் தொடர்பான கட்டுக்கதைகள் இந்தத் துண்டுப்பிரசுரங்களில் காணப்பட்டன. உணர்வுகளைத் தூண்டுவதற்காக ஹர்த்தால்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன, அரச ஊடகங்களின் பரவலான பரப்புரைகள் மூலம் உணர்வுகள் மேலும் தூண்டப்பட்டன.

பெரும்பாலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முன்னர், முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்களை பிளவுபடுத்துவதற்கான முயற்சிகள் நடப்பதாக கிண்ணியாவை பிரதிநித்துவப்படுத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.ஏ. மஜீத் எச்சரித்திருந்தார். ஏப்ரல் 12, 1985 அன்று உரையாற்றிய அவர் பின்வரும் கருத்துகளைத் தெரிவித்திருந்தார்: "தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். சில தீய சக்திகளும் சுயநலக் கட்சிகளும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் வன்முறை மோதல்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றன என்பதை உங்கள் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். எனவே முஸ்லிம்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மற்றும் தமிழ்மக்கள் இடையே ஒரு வன்முறை மோதலை உருவாக்க சில போலி அரசியல்வாதிகள் தீவிரமாக முயற்சித்துவருகின்றனர், அது உயிரிழப்பு மற்றும் சொத்துச் சேதங்களை மாத்திரமே ஏற்படுத்தும். இத்தகைய ஒரு மோதல் முஸ்லிம்களின் நிலையை மேலும் பலவீனப்படுத்தும். தமிழர்கள் மீது பழி சுமத்துவதற்குப் பதிலாக இந்த அரசியல்வாதிகளின் நோக்கங்களை நாம் பார்க்கவேண்டும்." இவ்வாறான வேண்டுகோள்களுக்கு மத்தியிலும், ஏப்ரல் 12 ஆம் திகதி காலை தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்த வன்முறை தானாகத் தோன்றியது அல்ல – இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது, மற்றும் இராணுவத்தின் உதவி, அரச பிரசாரம், ஒத்துழைக்க விரும்பிய தரப்புகள் அத்துடன் சமூகங்களை ஒன்றுக்கொன்று விரோதமாக செயற்பட வைக்கும் நோக்கில் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட கொள்கை என்பவற்றின் மூலம் கட்டவிழ்த்து விடப்பட்டதாகும்.**

களுக்கு எதிரான வன்முறை வெடித்தது. பல முஸ்லிம் இளைஞர்கள் அரச அதிகாரிகளின் உதவியுடன் பஸ்களில் ஏற்றப்பட்டனர். அவர்களிடம் இராணுவத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கிகள், கத்திகள் மற்றும் பெற்றோல் குண்டுகள் இருந்தன. படுகொலைகள் பற்றி வெளிவந்த ஹோம் போர் ஹியூமட் ரைட்ஸ் அறிக்கையின் ஒரு பகுதி இந்த வன்முறை எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்ற விபரங்களை வழங்குகின்றது.

"12 ஆம் திகதி காலை கல்முனையில் இருந்து காரைதீவுக்கு மாளிகைக்காடு ஊடாக பயணித்த மக்கள் , ஜிஹாத் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் மொஸாட்டினால் பயிற்றுவிக்கப்பட்ட விசேட அதிரடிப்படையினரால் இடை மறிக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டனர். தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் பலத்த காயமடைந்தனர். இருப்பினும், அவர்களால் மரணத்திலிருந்து தப்பிக்க முடிந்தது. தாக்குதலுக்கு உள்ளான ஒரு நபர் அதனை பின்வருமாறு விபரித்தார்: 'புத்தாண்டு விருந்துகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கான பொருள்களை கொள்வனவு செய்வதற்காக அதிகளவான பணத்தை நாங்கள் கொண்டு சென்றிருந்தோம். மாளிகைக்காடு சந்தியை நெருங்கும் வேளை ஒரு சில பொலிஸ் வாகனங்கள் வீதியின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை எம்மால் காண முடிந்தது. சில பொலிஸ் அதிகாரிகளும் இராணுவ உடை அணிந்த சில நபர்களும் அங்கிருந்தனர். பொலிஸ் அதிகாரிகள் நின்ற இடத்துக்கு சற்றுத் தூரமாக அதிக எண்ணிக்கையான நபர்கள் இருந்தனர், அவர்கள் அனைவரும் அப்பிரதேசத்துக்கு அந்நியமானவர்களாக இருந்தனர். நாம் அவர்களுக்கு அருகில் சென்றபோது, அவர்கள் முஸ்லிம் இளைஞர்கள் என எம்மால் அறியமுடிந்தது. அவர்களின் ஆடை மற்றும் தாடி என்பவற்றின் மூலம் அவர்களை முஸ்லிம்கள் என அலடயாளம் காண முடிந்தது. அந்த இளைஞர்கள் மூர்க்கமானவர்களாகத் தோன்றினர்."

"பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப்படையினர் (களுவாஞ்சிக்குடி) மற்றும் மாளிகைக்காட்டைச் சேராத அந்நியர்கள் அங்கு இருந்தது எமக்கு அசௌகரியத்தையோ பதற்றத்தையோ ஏற்படுத்தவில்லை. முஸ்லிம் அடிப்படைவாதிகள் மற்றும் ஏனையோருக்கு இடையே ஏற்படச் சாத்தியமான ஏதாவது அமைதியின்மையை தடுப்பதற்காக பொலிஸார் அங்கிருப்பதாக நான் நினைத்தேன். மாளிகைக்காட்டில் வசிக்கும் எமது முஸ்லிம் அயலவர்களுடன் எமக்கு எந்த வித முரண்பாடும் இல்லாததால், அவ்விடத்தில் நாம் பாதுகாப்பாகவே உணர்ந்தோம். நாம் எமது பயணத்தைத் தொடர்ந்தோம். நாங்கள் சந்தியை அடைந்தபோது, அச்சுறுத்தும் தோற்றம் கொண்டபல இளைஞர்கள் எங்களை நோக்கி விரைந்து வந்து பொல்லுகளால் எம்மைத் தாக்கத் தொடங்கினர் தாக்குதல் நடத்தியவர்களைத் தவிர வேறு நபர்களும் அங்கிருந்தனர், அவர்களிடம் பயங்கரமான ஆயுதங்கள் காணப்பட்டன. அவர்கள் தாக்குதலைப் பார்த்துக்கொண்டிருந்தனர்."


"எதிர்பாராத தாக்குதல் காரணமாக எமது புலன்கள் அச்சத்தில் உறைந்திருந்தன. நாங்கள் பலத்தை இழந்தோம், காயமடைந்ததுடன் மன வேதனையையும் அனுபவித்தோம். இது இளைஞர்களின் ஒரு மோசமான நடத்தை. சட்டரீதியாக வீதியைப் பயன்படுத்திய பொதுமக்கள் மீது சட்ட அமுலாக்க அதிகார தரப்புகளின் பிரசன்னத்தில் நடந்த இந்தத் தாக்குதல் ஒரு கொடுமையான விடயமாகும். தாக்கப்பட்டபோது, தாக்குதல் நடந்த இடத்திற்கு மிக அருகில் இருந்த பொலிஸாரின் கவனத்தை ஈர்க்க நாங்கள் அழுது கூக்குரலிட்டோம்.

"எமது கூக்குரலுக்குப் பொலிஸாரோ அல்லது விசேட அதிரடிப் படையினரோ பதிலளிக்கவில்லை. இந்தச் சம்பவத்துக்கு பின்னரான நாட்களில் குறித்த வீதியில் பயணித்த பல தமிழர்கள் கடத்தப்பட்ட நிலையில், எம்மீது தாக்குதல் நடத்தியவர்கள் எம்மைக் கடத்திச் செல்லாதது எமது அதிர்ஷ்டமே ஆகும். தனது சொந்தக் குடிமக்களுடனான பிரச்சினைகளுக்கு ஒரு நீதியான தீர்வை வழங்க முடியாத அரசாங்கம் சமூகங்களுக்கு இடையே வன்முறையை ஊக்குவித்துள்ளது என்ற யதார்த்தம் இங்கு நிறுவப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் உள்ள பூர்வீகத் தமிழர்களைத் தாக்க வேறு இடங்களிலிருந்து குண்டர்கள் கொண்டுவரப்பட்டனர்."

இப்படி அவர் தன் பயங்கர அனுபவத்தை விவரித்தார்.

பொலிஸாரின் தலையீடுகள் எதுவுமின்றி இந்தக் கொடுமை பல நாள்களுக்கு நீடித்தது, மேலும் கிழக்கு முழுவதும் இந்த வன்முறை பரவலடைந்ததுடன் அது வாரக்கணக்கில் நீடித்தது. வன்முறை திட்டமிட்டு நடத்தப்பட்டது. தமிழர்களின் வீடுகள் இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்பட்டன. வீடுகள் எரிக்கப்படுவதற்கு முன்பு சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன. பெண்கள் தங்கள் வீடுகளிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர் (Imtiaz and Hoole, 2011). முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் மீதுகூட எந்தவித இரக்கமும் காட்டப்படவில்லை. உள்ளூர் தமிழர்கள் உதவி பெற முயற்சித்தபோதும் எந்த வித உதவியும் வரவில்லை. பொலிஸாரின் பிரசன்னம் இருக்கவில்லை, பாதுகாப்புப் படையினர் செயற்படாமல் வேடிக்கை பார்த்தனர். வன்முறையின் முடிவில் காரைதீவில் மட்டும் குறைந்தது 40 தமிழர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இருப்பினும், உண்மையான எண்ணிக்கை தெரியாமலேயே உள்ளது. சில உடல்கள் ஒரு போதும் மீட்கப்படவில்லை. ஏனைய உடல்கள் இந்தக்கொடுமை பற்றி வாய்திறக்க மிகவும் அச்சத்துடன் காணப்பட்ட உறவினர்களால் அடையாளமிடப்படாத குழிகளில் புதைக்கப்பட்டன.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, பொலிஸில் பணியாற்றிய தமிழ் அதிகாரிகள் உள்ளிட்ட தமிழர்கள் முஸ்லிம் குழுக்களின் தலைவர்களாகக் கருதப்பட்டவர்களைக் கொன்றனர். போராளிகள் மறைந்திருக்கின்றனர் என சந்தேகிக்கப்படும் இடங்கள் மீது விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்துவர். அதனைத் தொடர்ந்து ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வரும் நேரத்துக்கு முன்னரே அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்று விடுவர். இது முஸ்லிம் கிராமவாசிகள் பழிவாங்கல் தாக்குதல்களை எதிர்கொள்ள ஏதுவாக அமையும் (Ismail, 1985).



### வன்முறைகளின் பின்னர்...!

இந்த வன்முறைகள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணைகள் எவையும் நடத்தப்படவில்லை. அரச ஊடகங்கள் இந்தச் சம்பவத்தைப் பெரிதாக அறிக்கையிடவில்லை, தெளிவற்ற விதத்தில் "சமூகக் குழப்பங்கள்" எனக் குறிப்பிட்டன. ஒட்டு மொத்த பிரதேசமும் விசேட அதிரடிப்படையின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் வன்முறையுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருந்ததாகவும்' தி ஐலண்ட்' பத்திரிகையில் 'இஸ்மாயில் கற்றி'என்பவர் எழுதியிருந்தார். தமிழர்களுக்கான தாக்குதல்களை இராணுவம் ஏன் தடுக்கவில்லை என ஒரு மூத்த இராணுவ அதிகாரியிடம் பி.பி.ஸி வினவியபோது, அவர் பின்வருமாறு பதிலளித்ததாக அவ்வூடகம் அறிக்கையிட்டிருந்தது: "முஸ்லிம்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு எமக்கு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை". பிரித்தானியாவினால் பயிற்றப்பட்ட விசேட அதிரடிப்படையினர் முஸ்லிம்களுக்கு ஆயுதம் வழங்கி உதவிபுரிந்தது மாத்திரமன்றி, தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த அவர்களைத் தூண்டியதாகவும் பிரித்தானிய இராஜதந்திரிகள் அந்த நேரத்தில் தெரிவித்திருந்தனர். உயர் ஸ்தானிகராலயத்தின் கூற்றுப்படி தாக்குதல்கள் "வெற்றிகரமானவையாக" அமைந்துள்ளன. ஏனெனில் தமிழ்ப் பிரிவினைவாத குழுக்களுக்கு முஸ்லிம்கள் ஆதரவளிப்பது முன்னர் இருந்ததை விட தற்போது குறைந்த சாத்தியம் மிக்க விடயமாக மாறியுள்ளது (Miller, 2020). இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கறுப்பு ஜூலை காலத்தில் தமிழர்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டுவதில் ஈடுபட்டதாக கருதப்பட்ட கொழும்பை தளமாகக் கொண்ட ஐ.தே.க.வின் அமைச்சரவை அமைச்சர் எம்.எச். முஹம்மது இந்த வன்முறையில் சம்பந்தப்பட்ட முக்கியமான நபர்களில் ஒருவர் . (Imtiaz and Hoole, 2011). ஆயினும், அவரது தமிழ் அமைச்சரவை சகாக்களாக இருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் எஸ். தொண்டமான் , ஐக்கிய தேசியக் கட்சியின் கே.டபிள்யூ. தேவநாயகம் ஆகியோர் இந்த வன்முறைக்கு "வெளியக சக்தியே" காரணம் எனக் குற்றஞ்சாட்டினர். மேலும், கிழக்கில் நடந்த வன்முறையில் பங்கேற்க கொழும்பில் இருந்து முஸ்லிம்கள் பயணிக்க பஸ்கள் மற்றும் ஜீப்களை ஒழுங்கு செய்ததாகவும் தொண்டமான் கூறியிருந்தார். அப்போதைய எதிர்க் கட்சித் தலைவர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கூட, தமிழர்கள் மீதான தாக்குதல்களை ஊக்குவித்தாக அரசாங்கத்தை குற்றஞ்சாட்டினார், "வன்முறையை அடக்க அரசாங்கம் விரும்பவில்லை, அதில் அவர்கள் நன்மையடைகின்றனர்" என அவர் குறிப்பிட்டிருந்தார். மன்னாரில் உள்ள ஒரு பள்ளிவாசலில் வைத்து மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு பழிவாங்கவே முஸ்லிம்கள் வன்முறையில் இறங்கினர் என்ற கூற்றை முன்னாள் பிரதம மந்திரியான ஸ்ரீமாவோ பண்டாரநயக்க நிராகரித்திருந்தார். "பி.எல்.ஓ(PLO )அமைப்பினால் பயிற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் போராளிகள் முஸ்லிம்களை கொல்வார்களா? பள்ளிவாசல்களில் முஸ்லிம்களைக் கொல்வதால் 'பயங்கரவாதிகளால்' எதையாவது அடைந்துகொள்வார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?" என அவர் கூறியதாக இஸ்மாயில் குறிப்பிட்டுள்ளார். 'அவர்கள் எப்போதாவது ஈழத்தை அடைந்தால்...அவர்கள் முஸ்லிம்களு டன் சேர்ந்து வாழ வேண்டும் இந்த ஒட்டுமொத்த பிரச்சினையும் ஒரு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. 'பயங்கரவாதிகள்' ஏன் முஸ்லிம்களைத் தாக்க வேண்டும்? குறிப்பிட்ட அமைச்சர்களுக்கு இதில் தொடர்பிருப்பதாக சிலர் கூறுகின்றனர், மொஸாட் மற்றும் கொமாண்டோக்களுக்கு [STF] இதில் தொடர்பிருப்பதாக வேறு சிலர் கூறுகின்றனர்." என்று ஸ்ரீமாவோ கூறியிருந்தார். அவரின் கட்சியைச் சேர்ந்த பதியுதீட் முஹம்மட் இஸ்ரேல் மீது குற்றம்சுமத்தினார். "முஸ்லிம்களையும் தமிழர்களையும் பிளவுபடுத்துவதற்காக சில வெளியகத் தரப்புகள் இந்த விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். மொஸாட் மீது எமக்குச் சந்தேகம் உள்ளது. அவர்கள் குழப்பங்களை உருவாக்குபவர்கள். இஸ்ரேலியர்கள் எப்போதும் இஸ்லாத்தின் எதிரிகளாக உள்ளனர். இஸ்லாத்தை சேதப்படுத்த அவர்கள் எப்போதும் பிரச்சினை களை உருவாக்குவார்கள்" என்று அவர் தெரிவித்தார். (Ismail, 1985)

### 40 ஆண்டுகளுக்குப் பிறகு...!

காரைதீவில் இடம்பெற்ற படுகொலை ஓர் அறியப்படாத அட்டூழியமாக மட்டுமல்லாமல், தமிழ் அரசியல் அதிகாரத்தை அழிப்பதற்காக இலங்கை அரசு எவ்வாறு பிரிவினையை ஆயுதமயமாக்கியது என்பதற்கான அப்பட்டமான அடையாளமாகவும் உள்ளது. இந்த வன்முறை தானாகத் தோன்றியது அல்ல - இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது, மற்றும் இராணுவத்தின் உதவி, அரச பிரசாரம், ஒத்துழைக்க விரும்பிய தரப்புகள் அத்துடன் சமூகங்களை ஒன்றுக்கொன்று விரோதமாகச் செயற்பட வைக்கும் நோக்கில் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட கொள்கை என்பவற்றின் மூலம் கட்டவிழ்த்து விடப்பட்டதாகும். கிழக்கில் தமிழ்முஸ்லிம் ஒற்றுமையை உடைக்க வகுப்புவாத தவறுகளைப் பயன்படுத்திய ஒரு பரந்த எதிர்ப்பு எழுச்சி மூலோபாயத்தை காரைதீவுப்படுகொலைகள் வெளிப்படுத்துகின்றன. அதே நேரத்தில் அடுத்த ஆண்டுகளில் இரு தரப்பிலும் கொடூரமான வன்முறைக்கு வழிவகுத்த இன விரோதங்களையும் இந்தப் படுகொலைச் சம்பவம் ஆழப்படுத்துகிறது .

இந்தப் படுகொலை பற்றிய உத்தியோகபூர்வ நினைவேந்தல் இல்லாமல் இருப்பது தற்செயலான நிகழ்வு அல்ல. தமிழ் வன்முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் "நல்லிணக்க" கலாசாரத்தில் வேரூன்றிய அழிப்பு மற்றும் தண்டனையற்ற அதே திட்டத்தின் தொடர்ச்சியாகும். ஆனால் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் காரைதீவுப் பேரழிவை நினைவுகூர்வது ஒரு துக்கச் செயலை விட மேலானது இது ஓர் அரசியல் எதிர்ப்புச் நடவடிக்கையாகும். இது முஸ்லிம்களுக்கு எதிரான தமிழர்களின் ஒரு தலைப்பட்ச வன்முறைகள் பற்றிக் கூறப்படும் தவறான கதைகளை சவாலுக்கு உட்படுத்துகிறது, மேலும் இழந்த உயிர்களுக்கு மட்டுமல்ல, தொடரும் கட்டமைப்பு வன்முறைக்கும் நீதி கோருகிறது. காரைதீவு போன்ற நிகழ்வுகள் வரலாற்றின் ஓரங்களில் புதைக்கப்படும் வரை, முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பற்றிய அர்த்தபூர்வமான பகுப்பாய்வை மேற்கொள்ளமுடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த வன்முறையில் ஈடுபட்டவர்கள் தமது சுற்றுப்புறங்களிலேயே வசிக்கின்றனர் என்ற உணர்வு கசப்புணர்வு தொடர்ந்து நிலைத்திருக்க காரணமாக அமையும். இந்த வரலாறு நேர்மையாகவும் வெளிப்படையாகவும் எதிர்கொள்ளப்படும் வரை, இந்தத் தமிழ் பேசும் சமூகங்களுக்கிடையேயான நீதி மற்றும் நல்லிணக்கம் என்பன எட்டாக்கனியாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழ் இலக்கியங்களில் புத்தபெருமானின் போதனைகள்

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
நிகழ்ச்சித்திட்ட தலைவர்,
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,
முகாமைத்துவ அலகு,
யாழ்பாணப் பல்கலைக்கழகம் , இலங்கை.

03



சங்ககாலத்தில் சிவன், கொற்றவை, முருகன், திருமால், வேந்தன், வருணன் முதலான தெய்வ வழிபாடுகளும், நடுகல் வழிபாடுகளும், அவற்றோடு தொடர்புடைய சடங்குகளும், நம்பிக்கைகளும் மக்களிடையே நிலைபெற்றிருந்தன. (பாலசுந்தரம், 2006, ப.293)

தமிழர் பண்பாட்டில் நடுகல் வழிபாடு பெருங்கற்காலத்திலிருந்து முதன்மையானதாக இருந்தது. நடுகல்லினை நினைவுத்தூண், வீரக்கல், மற்றும் வீரன்கல் எனவும் அழைத்தனர். பொதுவாக யுத்தகளத்தில் வீரச்சாவடையும் மறவனின் வீரத்தினைப் போற்றி நினைவுகூரும்வகையில் நடுகற்கள் நடுவது வழமையான மரபாக இருந்தது. அவற்றினை ஆதித் தமிழர் போற்றி வழிபட்டனர். அதற்கான சான்றுகள் இலக்கியங்களில் அதிகளவாகக் காணப்படுகின்றன.

திருக்குறளில் படைச்செருக்கு என்னும் அதிகாரத்தில் 771 ஆவது குறளில் திருவள்ளுவர் மிகத் தெளிவாக நடுகல் வழிபாடு தொடர்பாகக் குறிப்பிடுகையில் ஒரு பெண் தனது கணவனின் வீரத்தின் கீர்த்தியினை புகழ்ந்து இயம்புவது போல பின்வரும் குறட்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

***என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை***
***முன்நின்று கல்நின் றவர். (திரு:771 )***

மேலும், என்னுடைய தலைவனை எதிர்த்து நின்றவர்கள் எல்லாம் நடுகல் ஆயினர். அதாவது யுத்தத்தில் என் தலைவனை எதிர்த்து நிற்பவர்கள் அனைவரும் தலைவனால் தோற்கடிக்கப்பட்டு இறந்துவிடுவார்கள். அதனால் என் தலைவனை எதிர்த்து நிற்காதீர்கள் என ஆலோசனை வழங்குவதாக அமைந்துள்ளது. பிறிதொரு பாடலில் அள்ளூர் நன்முல்லையார் என்கின்ற பெண்பாற்புலவர் "களிறுபொரக் கலங்கு, கழல்முள்வேலி" என்று தொடங்கும் 306ஆவது புறநானூற்றுப் பாடல் ஒன்றில் மறவர் குலத்துப் பெண் ஒருத்தி தன்னுடைய முன்னோர்களின் நடுகல்லினை வைத்து நாள்தோறும் வீட்டுக்கு விருந்தினர்கள் வரவேண்டும் எனவும் போருக்குச் சென்ற எனது கணவனும், அவனுடைய வேந்தனும் எதிரிப்படைகளினை வெற்றிகொண்டு நாடு திரும்பவேண்டும் எனவும் வேண்டி நடுகல் வழிபாட்டில் ஈடுபட்டாள் என அள்ளூர் நன் முல்லையார் என்ற பெண்பாற் புல்வரின் அப்பாடல் சுட்டிக்காட்டுகின்றது.

நடுகல் வழிபாடு குறித்து அகநானூறு, புறநானூறு, மலைபடுகடாம் போன்ற சங்க நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் திருக்குறளிலும், சிலப்பதிகாரத்திலும் நடுகல் வழிபாடு தொடர்பான கருத்துகள் நிறைந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் வஞ்சிக்காண்டத்தில் நடுகற்காதையில் பத்தினியான கண்ணகிக்கு இமயத்திலிருந்து கொண்டு வந்த கல்லிலேயே படிவம் அமைத்து, அதனை முறைப்படி விழாக்கோலத்துடன் தெய்வமாக நாட்டிக் கொண்டாடியதாக நடுகற்காதையில் இளங்கோ அடிகள் குறிப்பிடுகின்றார். இவ்வாறு முன்னர் விவாதித்தது போல் மக்கள் பல்வேறு வகையான வழிபாட்டுமுறைகளில் ஈடுபட்டிருந்தபோதும் சங்க காலத்திலும், சங்கமருவிய காலத்திலும் வாழ்ந்த மக்களிடையே அவர்களுடையே ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட வழிபாட்டு முறையானது காணப்படவில்லை. இதனால் தான் சமணமும், பௌத்தமும் மக்களிடையே தொடர்ந்து பரவியது என்பது புலனாகின்றது. (சிவத்தம்பி, 1994).

அறிஞர்களின் கருத்துப்படி சமண, பௌத்தத் தத்துவங்களுக்கு இடையே அறம் குறித்து பெரிய வேறுபாடுகள் இல்லை. ஆனால் ஆன்மா குறித்து இவை இரண்டுக்குமிடையே முரண் நிலையான தன்மையுள்ளது. சமணம் ஆன்மாவினை ஏற்றுக்கொள்ளுகின்றது. ஆனால், பௌத்தம் ஆன்மாவினை ஏற்றுக்கொள்ளவில்லை. சங்க இலக்கியங்களிலும் தனிப்பட்ட ஓர் மதத்தினைப் பரப்புவது போல் மற்றும் சமய தத்துவங்கள், கொள்கைகள், சித்தாங்களினைப் பறைசாற்றுவது போல எந்த ஓர் இலக்கியங்களும் எழுதப்படவில்லையாயினும் திருமுருகாற்றுப்படை முருகனின் ஆறுபடை வீடுகள் தொடர்பாக விபரிப்பதுடன், பரிபாடல் வைணவ வழிபாடு பற்றிய கருத்துகளினை வெளிப்படுத்துகின்றது. (தட்சணாமூர்த்தி, 2021).

மேலும், மாங்குடி மருதனார் என்ற புலவரினால் எழுதப்பட்ட பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்வியல் முறையினையும், வாழ்வியல் சித்தாந்தங்களினையும் வெளிப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட நூலே மதுரைகாஞ்சியாகும். இந்நூலில் மதுரை நகரின் சிறப்பும் அங்கு வாழ்ந்த மக்கள் சமூக, சமய வேறுபாடுகள் எதுவுமின்றி முருகன், விஷ்ணு, மற்றும் சிவன் போன்ற கடவுள்களினைப் போற்றித் துதித்தனர் என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது.

அதேவேளை பௌத்த, சமண சமயங்களும் தமிழ் மக்களினால் போற்றித் துதிக்கப்பட்டன என்பதற்கும் அங்கு பௌத்த, சமண பள்ளிகளின் ஊடாக மதம், அறம், ஒழுக்கம் போன்ற கருத்துகள் மக்களுக்கு வழங்கப்பட்டன என்பதற்கும் பின்வரும் மதுரைக்காஞ்சியின் பாடல் வரிகள் சான்றாக அமைகின்றன.

***திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை***
***ஓம்பினர்த் தமீ,த் தாம்புணர்ந்து முயங்கித்***
***தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்***
***தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்***
***காமர் கவினிய பேரிளம் பெண்டிர்***
***பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்***
***சிறந்து புறங்காக்கும் கடவுள் பள்ளியும் (மதுரை : 461 - 67)***

இப்பாடல்வரிகள் மூலம் பௌத்த மதத்தினைப் பின்பற்றியவர்கள் இறைநம்பிக்கைகளுடன் கூடிய அமைதியானதும், மகிழ்ச்சிகரமானதுமான வாழ்க்கையினை வாழ்ந்தனர் என்பது உறுதிப்படுத்தப்படுவதுடன் மேலும் சமூகத்தில் வாழ்ந்த பெரியவர்கள் தாம் பௌத்த சிந்தனைகளினைப் பின்பற்றுவது போல், புத்த கோயில்களில் வழிபாடுகளில், ஈடுபடுவது போல் இளையவர்களும் அதாவது இளம் சமூகத்தவர்களும் சமய வழிபாட்டுமுறைகளில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களினை மதத்தலங்களுக்கு அழைத்துச்சென்றார்கள் என்பதையும் வெளிப்படுத்துவதுடன் அக்காலத்தில் புத்த பகவானை எவ்வாறு வழிபட்டார்கள் என்பதையும் மதுரைக்காஞ்சியின் பாடல்வரிகள் புலப் படுத்துகின்றன.

மேலும் இப்பாடலின் வாயிலாக சமகாலத்தில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் எவ்வாறு இன்றும் கௌதமரினை வழிபடுகின்றார்களே அவ்வாறே சங்ககாலத்திலும் மலர்கள் தூவி, வாயினால் புகழ்ந்துபாடி வழிபாடு செய்தனர் என்பது தெளிவாகிறது. புத்தரின் போதனைகளில் "அகிம்சை", "அறம்", "ஒழுக்கம்" எனும் மூன்றும் அடிப்படையானவை. இவற்றினால் ஈர்க்கப்பட்டு பரம்பொருள் மீதான நம்பிக்கையில் ஒரு கட்டுக்கோப்புடன்கூடிய மத நல்லிணக்கத்துடன் தம் வாழ்க்கை முறையினை வாழ்ந்தனர் என இப்பாடல் மூலமாகப் புரிந்துகொள்ளலாம்.

(தொடரும்)

## இராகவன்

பாகம் 3

தேவதூதனாக வந்தவர் வேறுயாருமல்லர் . அது எங்கட ரஞ்சண்ணா தான். அவரை ஈழத்து இலக்கிய உலகம் நன்கறியும். "மோகவாசல்" என்ற ஒரேயொரு சிறுகதைத்தொகுப்பின் மூலம் ஈழத்து இலக்கிய உலகை புதிய திசைநோக்கித் திருப்பிவிட்டவர். "கோசலை" என்ற முத்திரைக்கதையால் நம் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும் ரஞ்சகுமாரை நான் ரஞ்சண்ணா என்றுதான் அன்போடு அழைப்பேன். அவரைச் சண்முகன்தான் முதலில் கண்டார். "அங்க பார் றஞ்சன் வாறான்" என்றார். நாங்கள் ஓட்டோவில் இருந்து இறங்கினோம். "என்ன சங்கதி ? இதில வந்து நிக்கிறியள்?" எண்டு அவர் கேட்டார். "ஓட்டோ றைவர் ஏதோ அலுவலாப் போகிட்டார். அதுதான் நிக்கிறம்" எண்டு சண்முகன் சொன்னார். பலதும் பத்தும் கதைத்தோம். முடிவில் நாங்கள் வந்த விசயத்தைப் பற்றியும் அவரிடம் சொன்னோம். அதுக்கு அவர் "கண்ணனை நான்தான் கொழும்பிலயிருந்து இஞ்சை கூட்டி வந்தனான். நாளைக்கு மத்தியானத்துக்குப் பிறகுதான் கொழும்புக்கு வெளிக்கிடுவம் . அதுவரைக்கும் ஆள் சும்மாதானிருப்பார். நல்ல விசயந்தானே? நீங்கள் நாளைக்குக் காலமை மீற்றிங்கை அரேஞ்ச் பண்ணுங்கோ கண்ணனைக் கூட்டிக்கொண்டு வாறது என்ர பொறுப்பு" எண்டு ரஞ்சண்ணா சொல்லி எங்கள் நெஞ்சில் பாலை வார்த்தார்.

அப்போது கடையொன்றினுள்ளிருந்து கண்ணனும் வந்தார். ரஞ்சண்ணா கண்ணனை அழைத்து எங்களை அறிமுகப்படுத்தி நாங்கள் வந்த விசயத்தையும் சொன்னார். அவரும் முழுமனதோடு சம்மதித்தார். நாங்களும் வந்த நோக்கம் நிறைவேறிய மகிழ்வுடன் புறப்பட்டோம். சண்முகனை அவரது வீட்டில் விட்டுவிட்டு நான் யூனியன் தலைவர் சிதம்பரப் பிள்ளை வீட்டுக்குப் போய் "சேர்! நாளைக்குக் காலமை வாறன் எண்டு கண்ணன் சொல்லியிருக்கின்றார். நீங்கள் ஆயத்தப்படுத்துங்கோ"எண்டு சொன்னன். "பிறகென்ன வெண்டு வந்திட்டாய் சிறப்பாய் செய்துமுடிப்பம்" எண்டு அவரும் குதூகலித்து விடைதந்தார்.

27


மறுநாள் காலமை ஒன்பது மணிபோல நான் யூனியனுக்குப் போனன். கேற்றில, "தமிழ்நாடு காலச்சுவடு சஞ்சிகை ஆசிரியர் கண்ணன் 'கோசலை' புகழ் ரஞ்சகுமார் கலந்துகொள்ளும் இலக்கியச்சந்திப்பு" எண்டொரு போர்ட் எழுதித்தொங்கவிட்டிருந்தது. குறுகியகால ஏற்பாட்டில் தலைவர் அந்தச் சந்திப்பினை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார். அன்றைக்குப் பத்து மணி போல ஒரு ஹைஹெஸ் வாகனத்தில் கண்ணனுடன் ரஞ்சண்ணா, ரவியண்ணா (book lap உரிமையாளர்), சோமிதரன் ஆகியோரும் வந்திருந்தனர். தலைவர் சிதம்பரப்பிள்ளை தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் எழுத்தாளர் தெணியான் மற்றும் சேரன் சிவராசா (ஙிதர்சனம் வெளியீடாக கேசவராஜனின் இயக்கத்தில் வெளிவந்த, 'பிஞ்சுமனம்' என்ற திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்திருந்தார். இத்திரைப்படத்தில்தான் சங்கீத பூஷணம் குமாரசாமி பாடிய 'பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றதே....' என்ற பாடலும் இடம்பெற்றிருந்தது. ) ஆகியோர் கண்ணனிடம் கேள்விகேட்டுக் கருத்துப்பகிர்வினை மேற்கொண்டனர். நான் கண்ணனிடம் நேர்காணல் வடிவில் கேள்விகள் கேட்டு உரையாடலை வழிநடத்தினேன். அப்போது கண்ணன் என்னிடம் "இந்த நிகழ்வை எழுத்தில் பதிவுசெய்து புகைப்படங்களோடு காலச்சுவட்டுக்கு அனுப்பிவையுங்கள்" எனக்கேட்டுக் கொண்டார். அதன்படியே நானும் அந்நிகழ்வைத் தொகுத்து எழுதிப் புகைப்படங்களோடு காலச்சுவடு இதழுக்கு அனுப்பிவைத்தேன். அது காலச்சுவடு வெளியிட்ட ஈழச்சிறப்பிதழில் வெளியானது. நிகழ்வு முடிந்ததும் அவர்கள் ஹைஹெஸில் பருத்தித்துறைக்கு உதயன் புத்தக நிலைய உரிமையாளர் இ.து. குலசிங்கத்தைச் சந்திக்கப் புறப்பட்டனர். அவர்களோடு சேர்ந்து நானும் புறப்பட்டேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் சிந்திமா

கவிதை





அவள் என் உயிர்த்தோழி...
முப்பது வருடங்களுக்கு முன்
நானும் அவளும் செல்லக்கிளிகளாக
பள்ளியெங்கும் பறந்து திரிந்தோம்.
புளிப்பு மாங்காய்களை கல்லால் விழுத்தி..
சுவரில் கொத்திச் சுவைத்தோம் .
இரட்டைச்சடைகளோடு
இளம் நாயகிகளாக உலா வந்தோம்.
ஒருநாள் அவள் போய்விட்டாள்..
வழுக்கும் நிலமெல்லாம்..
வானவில்லாகத் தெரிந்தவள்..
ஊர் பேசித் தூற்ற, உறவெல்லாம் கலங்கி அழ
நடுநிசியில் யாருக்கும் தெரியாமல்..
விடுதலைக்கு வித்தாகவென்று போய்விட்டாள்.
அந்த வயதில் என் நெஞ்சடைத்துப் போனது..
என் உயிரின் பாதி வெட்டிப் போனதாக வலித்தது
பல இரவுகள் தூங்காது அழுதேன்
நானும் அவள் தாயும் தேடித் திரிந்தோம்..
கண்டுபிடித்து அழுதோம்..
மண்டியிட்டாள் தாய்.. தன் வாழ்வு முடிந்ததாய்
தாங்கமுடியாமல் அழுதாள்....
'கிபிர்' கொன்ற கணவனின் இழப்பை..
மகள் மட்டுமே நிரப்புவதாக கத்தினாள்.
நட்புக்குள் மறந்திருந்த பாசத்தைச் சொல்லி நான்
அழுதேன்..
அவள் அப்படியே இருந்தாள் மாற்றம் இல்லை..
அதற்கு மனமே இல்லை..
என்ன பெண் இவள்?வெறுப்பாக இருந்தது..
கூண்டுக்குள் நின்றபடி ......போ! போ! என்று
எம்மைத் துரத்திக்கொண்டிருந்தாள்
பத்து நாட்களில் அவளுக்கு
பத்து வயது கூடியிருந்தது?
அவளைப் பிரிய மனமின்றி அழுதேன்.
அவள் கல்லாக நின்றாள், கசியாமல்.
இது என்ன கொடுமை?
இந்தப் பெண் ஏன் மாறினாள்?
இந்தப் பிள்ளைகளைக் களவாட
இவர்கள் யார்?
பெற்றவளிடம் இருந்து.. பிரிக்க
இவர்களுக்கு யார் உரிமை கொடுத்தது?
வெறுப்பின் உணர்வு..உடல் முழுவதும் கலந்தது...
அவர்களோடு சண்டையிட்டுப் பார்த்தேன்..
'முடிந்தால்...மாற்றிப்பார்..
வந்தால் கொண்டுபோ ' என்றார்கள்..
என்ன மாய மந்திரம் மகுடிக்கு பாம்பு
வசப்பட்டதாக மாறிவிட்டாளே!
இனிமையான பள்ளிப்பருவம்
கசப்பான அனுபவங்களைஅள்ளித்தெளித்தது
அவளைக் காணவேண்டும்
நிறையப் பேசவேண்டும்
மனம் கத்திக்கொண்டே இருந்தது.
நாள்முழுவதும் காவல் இருந்தோம்
காட்ட மறுத்தார்கள்.
பயிற்சிக்குப் போனதாகச்
சொன்னார்கள்
அவளுக்கென்ன பயிற்சி????
விமானக் குண்டுக்குப் பயந்து
பள்ளி மேசைக்குள் பதுங்கியவள்
ஷெல் விழும் ஓசை கேட்டு
என் கைகளை நொருக்குவதாய்
அழுத்தியவள்
போரிடும் முறை பயில..
பயிற்சிக்குப் போனாளா? நம்ப மறுத்தேன்.....
காதுகள் வலித்தன...... காட்ட மறுத்தார்கள்.
திரும்பி வந்தோம்..காலங்கள் கடந்தன...
வெற்றிலைச் சாத்திரங்கள்..... நேர்த்திக்கடன்கள்...
ஏறாத கோயிலில்லை....எரிக்காத சூடமில்லை....
கலையாடிகள்...கைவிரிக்க....
சாத்திரிகள்..நம்பிக்கை தர
அந்தத் தாய்..
இன்னும் அழுதுகொண்டிருக்கிறாள்..
மகள் வருவாள் என்று..சிந்தித்துக்கொண்டே..
அவள் ஆயுள் முடிவுக்கு வருகிறது..
உண்டா? இல்லையா? என்கின்ற வருத்தம் ..
இருந்தால் வந்திருப்பாள் என்னும் வெறுப்பு..
மறந்து போனாளோ? என்னும் ஏக்கம்.
இறந்து போனாளோ என்னும்..சந்தேகம்
இன்னும் இருப்பாள் எனும் நம்பிக்கை..
கடந்தன.. காலங்கள் வாழ்வின் மாற்றங்கள்..
எத்தனை கடந்தும்.. எல்லாம் மறந்தும்..
இன்னும் என் நெஞ்சுக்குள்..
அவள் நினைவுகள் மறைய முடியாமல்..
அழுதுகொண்டு வாழ்கின்றன....
என் செல்ல நண்பி
எங்கு போய்த்தொலைந்தாள்?
போன இடத்தில் அவளுக்கு என்ன
நடந்தது..அவள் கனவு கண்டாளா ?

எதைக் கண்டு மிரண்டாள்.
இந்தப் பாசம் கொண்ட நண்பியை
ஒரு நொடிக்கேனும்
நினைக்கவில்லையே.
வறுமையின் பிடியில்..
பார்க்க ஆளில்லாமல் பஞ்சத்தின் மடியில்
படுத்திருக்கும் தாயை விடவா..
இந்தத் தேசத்தின் விடுதலை பெரிதாகத் தெரிந்தது..
அதை நீ பெறவுமில்லை..திரும்ப வரவுமில்லை..
உயிருடன் எரிந்தாயோ?வெட்டிப் புதைத்தாரோ?
குண்டுகள் கொண்டு நீயே மரித்தாயோ?
மானபங்கம் செய்தாரோ? மலக்குழிக்குள்
இட்டாரோ?
மார்பைக் கிழித்தாரோ.. வதை முகாமில்
கிடந்தாயோ..
உருமாற்றம் செய்தாயே? விலைக்குப் போனாயோ?

பதிலில்லாக் கேள்விகள் பல இருக்கும்...
என் நெஞ்சு வேகையில் மட்டும்தான்..
அவள் நினைவு சாகும்.
அவள் தாயின் நெஞ்சு சூடெழும்
நெஞ்சாண் தள்ளி நிமிர்ந்திருந்து கேட்கும்...
வானக் குண்டுக்குப் பயந்து. என் சட்டைக்குள்
விழி மிரண்டு...தகித்து....
குண்டுக்கண் கலங்க நின்ற... ...
என் மகளை..ஏனய்யா மாற்றிப் பிரித்தீர்கள்.?...
எதையய்யா நீங்கள் சாதித்து முடித்தீர்கள்?...
வலிகொண்ட வாழ்வுகளைத்தானே
கிடைசியில் தந்தீர்கள்....

ஆனந்தி

# வேட்பாளப் பெருந்தகைகளுக்கு...!




*வணக்கம்.*

அடிவாங்கி நொந்து நூலாப்போன பிறகும் உங்கள் எல்லாருக்கும் புத்தி வரேல்லை எண்டுதான் நான் சொல்லுவன். புத்தியை இன்னும் வட்டுக்கை வச்சிட்டுத்தான் திரியிறியள். ஒரு மனுசன் விழுந்து எழும்பிறதுதான் வழமை. அதை நான் ஒத்துக்கொள்ளுகிறன். ஆனால் விழுந்தனியள் விழுந்த படியே கிடக்கிறியள். எழும்பிறியள் இல்லை. ஆளுக்காள் வெட்டுக் கொத்து. போஸ்டருகளைக் கிழிக்கிறியள். பாத்தால் எல்லாரும் மச்சான், மாமன், பெரியதாய் , சிறியதாய் பிள்ளையள்தான். அதுக்கங்காலை ஒண்டும் இல்லை. தமிழரின்ர பேராலை எப்ப கட்சியள் தொடங்கினியளோ அண்டைக்குத் துவங்கின பிரச்சினை இண்டைக்கு வரைக்கும் தீரேலை. தேசியம் தேசியம் எண்டு கதைக்கிறியள். ஒரு இனம் தன்ரை தேசியத்தைப் பற்றிக் கதைக்கத் தனக்கு என்ன அடிப்படைத்தகுதி இருக்கவேணும் எண்டதை முதலிலை சிந்திக்கவேணும்.



அவசரமா ஒரு கடுதாசி

முதலிலை அத்திபாரம் இறுக்கமா இருக்கோ எண்டால் ஆளையாள் பாத்து முழிக்கிறியள். எங்கடை கலை எங்கை போச்சுது? கலாசாரம் எங்கை போச்சுது? பண்பாடு எங்கை போட்டுது? எல்லாத்தையும் சுருட்டிக்கட்டி அஞ்சு சந்தியிலை இருந்துவாற பழம் இரும்பு வாங்கிறவைக்கு வித்துப் போட்டுத்தான் தேசியத்தைப் பற்றிப் பேசிறம். நாங்கள் பூர்வீகமான குடியள். எங்களுக்கும் இஞ்சை வாழ உரிமை இருக்கு. எண்டு கனக்க எல்லாம் சொல்லிக் கத்திறியள். அதை நிரூபிக்க எங்களிட்டை என்ன இருக்கு? என்னத்தை எங்கடை பொக்கிஷமா வைச்சிருக்கிறம். கொஞ்ச நஞ்ச தொன்மத்தை வெளிக்காட்டிக்கொண்டு நிண்ட பழமைகளைப் பறைசாற்றின கோயில்களை இடிச்சுக் கட்டி, பெயின்ற் அடிச்சு மகத்துவம் இல்லாத இடங்களா சூதுவிளையாடுற கசினோக் கொம்பனியளைப்போல மாத்தினீங்கள். குளங்களை எல்லாம் முடி மறைச்சு அதுகள் இருந்த இடங்களை அடையாளம் தெரியாத இடமாக்கிப் போட்டியள். என்னத்தைத்தான் நீங்கள் செய்யேல்லை?

ஆரோ ஒருத்தன் எத்தனையோ கிலோமீற்றருக்கு அங்காலை இருந்துகொண்டு தன்ரை சூழ்நிலைக்கேற்றமாதிரித் தனக்கு அளவாத்தைச்ச சட்டையை வேண்டி நாங்கள் போட்டுக்கொண்டு நாகரிகம் எண்டு சொல்லிக் கொண்டு தான் தேசியம் பேசுறம். நாங்கள் எங்களுக்கு எண்டு வைச்சிருந்த கல்வி முறை தொடக்கம் சாப்பாட்டுமுறை வரை எல்லாத்தையும் தலைகீழாக்கிப் போட்டுத்தான் தேசியம் பேசுறம்.

ஒரு மொழியைப் பேசுற இனம் தன்னைத் தக்க வைச்சுக்கொள்ள வேணும் எண்டால் அது எல்லாவிதத்திலையும் 'வலு ஸ்ரோங்காக' இருக்க வேணும் எண்டது ஒரு பொது நியதி. அத்திபாரம் இல்லாமல் எல்லாத்தையும் அந்தரத்திலை வைச்சுக் கொண்டு வாக்குகளுக்கு மட்டும் தேசியத்தைச் சொல்லுறது அவ்வளவு பொருத்தமானதாக இல்லை தம்பிமாரே.

ஒரு இனத்தின்ரை எழுச்சி ஒரு கிராமத்திலை இருந்துதான் வரவேணும். இப்ப கிராமங்களுக்குரிய எலக்சன்தான் நடக்கப் போகுது. இப்ப அதிலை கிராமத்தையும் துலைச்சமெண்டால் பிறகு மீட்சி இல்லை. கிராமத்தை அபிவிருத்தி செய்யிற ஆக்களுக்குத்தான் உங்கடை வாக்குகளைக் குடுக்க வேணும். கிராமத்தை அடகு வைக்கிறமாதிரி உங்கடை தேர்வு இருக்கக்கூடாது. உங்கை அடைவுக் கொம்பனியள் வந்ததாலை எத்தினைபேர் றோட்டிலை நிக்கினம். எத்தினைபேர் தற்கோலை செய்து போட்டினம். அப்பிடி அடைவு வைக்கிற ஆக்களும் எலக்சன் கேக்கினம். கவனம். வாக்குப் போட முதல் ஒண்டுக்கு ரண்டுதரம் வடிவா யோசிச்சுப் போடுங்கோ. எலக்சன் ரிசல்ட் வந்ததும் மறுமொழி போடுங்கோ.

இப்படிக்கு ,
அட்டாவி அன்னமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கண்டு 4 ஓடை

(Cat Gun - –Do or Die)

திருப்பங்கள் நிறைந்த சித்திரத் தொடர்கதை

கதை: இ.சு.முரளிதரன்
வரைகலை - மகேந்திரன் வினித்




## சிறுவர் கைவண்ணம்




**இ.திரிசன்.**
தரம் 2 B
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை



**ர.சபிஸ்ணன்**
தரம் 3
கல்வயல் /ஸ்ரீ ஷண்முகானந்தா வித்தியாலயம்

# கலைமுகம் இதழ்- 79 சிறு குறிப்பு




கலை இலக்கிய சமூக இதழான "கலைமுகம்" தனது 79 ஆவது இதழைப் பிரசவித்துள்ளது. வழமைபோன்று மிக ஆக்கபூர்வமான, அறிவு பூர்வமான கருத்துகளை தன்னகத்தே சுமந்து இதழ் -79 வெளிவந்துள்ளது.

ஞா.கோபி, சி.ரமேஷ், சாந்தன், இளவேனில், அனோஜன் பாலகிருஷ்ணன், இ.ஜீவகாருண்யன், அ.யேசுராசா, சின்ன ராஜா விமலன், யோ. யோண்சன் ராஜ்குமார் ஆகியோர் வரைந்த கட்டுரைகள் இதழை இன்னும் மெருகேற்றுகின்றன. ந.சத்தியபாலன், அஸ்வகோஷ், அனார், பஹீமா ஜஹான், சித்தி றபிக்கா பாயிஸ், தீபிகா, சீசர் குகேந்திரன், யுகசேனன் ஆகியோரின் கவிதைகளும் இதழுக்கு வலுச்சேர்கின்றன. ந.சத்தியபாலனின் மொழிபெயர்ப்புக் கவிதையும், எம்.ரிஷான் ஷெரீப்பின் மொழி பெயர்ப்புச் சிறுகதையும் தெய்வீகன் மற்றும் இராகவன் ஆகியோரின் சிறுகதைகளும் எமது வாசிப்பு மனோநிலைக்கு தீனி போடுவதாக அமைந்துள்ளன.

சு.குணேஸ்வரனின் "சங்க இலக்கியம் வழிபாடும் நீர்ப்பண்பாடும்" நூலினை வேல்நந்தனும், தில்லையின் "நிலங்கபுந்தவள்" நூலினை தி.லலிதகோபனும், அனாமிகாவின் "ததா கதா" நூலினை காயத்திரியும் மதிப்பீடு செய்துள்ளனர். எஸ்.கே.விக்னேஸ்வரனின் பத்தியும் இதழுக்கு வலுசேர்கின்றது. எப்போதும் போல "கலைமுகம்" தன் வாசகர்களை ஏமாற்றிவிடாது கனதியாகவும் காலத்தேவை அறிந்தும் இம்முறையும் வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org